














சாதியமும் பகவத் கீதையும்


Pax Ravichandra












— B.R. Ambedkar, Annihilation of Caste


“**Though, I was born a Hindu, I solemnly assure you that I will not die as a Hindu**”




“Lost rights are never regained by appeals to the conscience of the usurpers, but by relentless struggle.... Goats are used for sacrificial offerings and not lions.”

இறக்கைகள் இருந்தும்
பறக்க முடியாத
வண்ணப் பறவைகள் நாம்
இதழ்கள் இருந்தும் மலரமுடியாத
வாச மலர்கள் நாம்

தீண்டாமை வாட்டும்
சாதியக் கூண்டில் எம்
வாழ்நாள் சிறையிருப்பு
வர்ணத்தீயில் கருகிட
நாளும் சூத்திரர் எம் தீ மிதிப்பு








சனாதன கீதையும் சாதியமும்

துவாபர யுகம்


விரிந்து பரந்து கிடந்த குருஷேத்திர பூமி எங்கும்
பாண்டவ-கௌரவ சேனைகளின் ஆரவாரம்
அண்டங்கள் நடுங்க, சங்குகள் ஒலிக்க, கண்ணீரும்
குருதியும், கங்கையாய்ச் சிந்திடப் போர்க்கோலம்





***பெரும் படையோ கௌரவர்க்குக் கவசம்
ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் தஞ்சமடைந்த
பாண்டவர் நெஞ்சத்திலோ பரவசம்***

விஷாத யோகத்தால் மனம் குழப்பி,-கிருஷ்ணனிடம்
தஞ்சம் புகுந்த மஹாரதன் அருச்சுனன், போராடத் துணிந்த
சொந்தங்களைக் கண்டு, கண்கள் நீராட- நெஞ்சம் தடுமாறக்
கடமை மறந்து கலங்கி நின்ற குந்தி புத்திரன்



கிருஷ்ணா, போரால் குலம் நாசமடையும்-காலாகாலமாக
இருந்து வருகின்ற குலதர்மங்கள் அழியும்-தர்மம் குன்றிட-
குலம் முழுவதையும் அதர்மம் சூழும்-(1-40)



அதர்மம் மிகுவதால் குலமகளிர் கற்பை இழப்பர்
இதனால் ஜாதிக் கலப்பு உண்டாகும்-(1-41)
ஜாதிக் கலப்பினால், குலத்தை அழித்தவர்களுக்கும்.
குலத்தினருக்கும் நரகமே கிடைக்கின்றது
சாதியம் நீதியாக புலம்பி நின்ற வில் விஜயன்

“A rebel is a fighter,
a warrior.
But how can you be a warrior in a cave in the Himalayas?
With whom are you going to fight?
The rebel remains in the society,
but he is no longer part of the society –
that is his renunciation and that is his rebelliousness.

He is not stubborn,
he is not adamant,
he is not an egoist;
he does not just go on fighting blindly.” Osho


கருவானில் வெள்ளிகள் பூத்தாட, பூத்த பௌர்ணமி கண்டு
அல்லிகள் கூத்தாட, அலைகள் கரை தழுவி இசைபாட,
தென்றல் நீராடி சீதளம் பூண்டு சதிர் ஆட
திரிவேணி சங்கமம் நாடி உல்லாச நடைபோடும் யமுனை

புருவம் வில்லாக, பூத்த பருவம் காண்போரை மயக்கும்
புது வசந்தமாக, மீன்கள் துள்ளி விளையாட, படகுத் துறையில்
அமர்ந்திருந்த கன்னி மனதிலோ ஆயிரம் கற்பனை,
மச்ச வாசம் வீசும் மச்சகந்தியோ பிரம்மனின் அழகிய ஒப்பனை


தூக்கி மடித்த பொற்கால்களில் தொங்கி நின்ற சிலம்புகள் சிலிர்க்க
வளையல்களை காற்றுரசி இசைக்க, கன்னத்தில் கை வைத்து-ஓடும்
நதியை விழிகள் இரசிக்க, மங்கை அழகை தென்றலும் தழுவி ருசிக்க
பொற்கலச மார்பும், செவ்விதழ் புன்னகையும் மதனையும் மயக்கும்

கார்குழலில் பூவனம், கன்னச் சிவப்பில் நாணம், நங்கையோ
மோகனம் பூத்த பூவனம், வண்டினம் மொய்க்காத நந்தவனம்,
ஓடும் யமுனையோ ஒய்யாரி, படகு ஓட்டி மங்கையோ சிங்காரி

அக்கரை செல்ல அந்தணன் பராசரன்
அணங்கை விளிக்க-சொப்பனம் கலைந்த
சுந்தரி- சுந்தரனை கண்டே
சந்திரனை கண்டு மலர்ந்த அல்லி




ஓடும் நதியில் படகு மிதந்து ஓட-யமுனையில் கலந்த
கன்னியின் விழிகளில் பாய்ந்தோடும் காதல் வெள்ளம்
வானளந்த பார்ப்பனன் விழிகள் வியப்பில் நிலைக்க,
நட்சத்திர மண்டலங்களின் அற்புதக் கோலம்



அரிய சுப நேரம்-ஆணும் பெண்ணும் கூடிக் கலந்தால்,
பிறக்கும் புத்திரனோ ஞானி, அருள் புரிவாய் கன்னி,
மொழிந்த சோதிட மேதையோ பிராமண ஜாதி


யாரும் காணதிருக்க-யோக சக்தியால் சுற்றிலும்
பனித்திரை போர்த்து, குழந்தை ஈன்ற பின்னரும்
கன்னிமை நிலைக்க வரமருளி, மச்ச வாடை களைந்து,
மணக்கும் பரிமள மேனி அருளி கொண்ட உறவு

கரை சேர்ந்த படகு, அந்தணன் வேண்டுதலைக் கரையேற்ற,
அர்ப்பணமாய்த் தன்னை உவந்தளிக்க பூண்ட உறவு
பார்பன பராசரனும், சூத்திர சுந்தரியும் கூடிட-கருத்த
கிருஷண த்வைபாயனுக்கு அன்னையான அற்புத நிகழ்வு




விளை நிலமாய், தன்னை அர்ப்பணித்த கன்னி
அர்ப்பணிப்பிற்கு அருள் வரமாய்-கற்பையும்
காலமெல்லாம் பொன்மேனியில் பரிமளம் நிலைக்க
பரிமளகந்தி என்றே புதுப் பெயரும் சூடிய அம்மணி

கார்குழலில் பூவனமாட, பொன்மேனி வாசம்
பூந்தென்றலில் ஆட, கங்கையில் உலாவிவிடும் கன்னியைக்
கண்ட மன்னன் சந்தனுவின் மனதில் காதலின் வாசம்
கனவிலும், நனவிலும் கன்னியின் பரிமள வாசம்



கங்கைக்குத் தங்கையோ, காமன் மங்கையோ,
என்னை வாட்டும் மன்மதன் மலர்கணையோ?
காதலில் வீழ்ந்த அத்தினாபுரி மன்னன் சந்தனு
கன்னியை எண்ணி மெலிய காமனோ சத்துரு

தந்தையின் மனத்துயர் போக்கிட, சந்தனு, சத்தியவதி
மணவாழ்வில் இணைந்திட, முடி துறந்து, பிரம்மசரியம் பூண்டு
பீஷண விரதம் ஏற்ற தேவ விரதன், வானவர் போற்றி
பீஷ்மன் எனப் பெயர் சூட்டிய கங்கா புத்திரன்





சித்திராங்கதன், விசித்திர வீரியன் பிறந்திட, சந்தனு மடிந்திட
மூத்தோன் கந்தர்வனால் உயிரிழந்திட-இளையோன்
காசி ராஜன் புத்திரிகள் அம்பிகா, அம்பாலிகாவை மணந்திட
சுயம்வரத்தின் சுதந்திரத்தை சிறையெடுத்த சுயநல பிரமச்சாரி

அரசனும் வாரிசின்றி மடிந்திட-அஸ்தினாபுரி அரியணை
காவலன் இன்றி வருந்திட, அல்லலுற்ற ராஜமாதா சத்தியவதி
அன்பு மகன் வேதவியாசனை நினைத்தார், நியோகத்தால்
அஸ்தினாபுரிக்கு அரசனை அருள, வரம் வேண்டி அழைத்தார்


கோர உருக்கொண்டு வியாசனும், கொடியிடையாள்
அம்பிகாவைச் சேர, மான் விழிகள் அஞ்சி மூடிட, மகனாய்
அந்தகன் திருதராட்டினன், அஞ்சி மேனி வெளுத்த
அம்பாலிகைக்கோ ஆரோக்கியத்தில் பஞ்சையாய் பாண்டு



அம்பையை அன்னை கெஞ்சிட-மறுத்தவள்
அலங்கரித்து தோழியை அனுப்பிட
வாழ்த்திப் பணிந்து தன்னை அர்பணித்தவளுக்கு
அருள் வரமாய் பிறந்தவன் ஞானி விதுரன்.

அந்தணனிற்கும் சூத்திர பரிமளகந்திக்கும் மகனான
கறுப்பன் வேத வியாசனோ அனுலோமன்
க்ஷத்திரிய சந்தனுவிற்கும் சூத்திர சத்தியவதிக்கும்
மகனோ க்ஷத்திரிய சித்திராங்கதன்






க்ஷத்திரிய அம்பிகை, அம்பாலிகாவிற்கும்-
அனுலோமன் வியாசனுக்கும் பிள்ளைகளாய்
அந்தகன் திருதராட்டினன்-பாண்டு, க்ஷத்திரியர்?


பாண்டு பத்தினிகளாய் க்ஷத்திரிய குந்தி-மாத்திரி,
துர்வாசர் அருளிய மந்திரம் குந்திக்கு வரமாக
தருமன், வீமன், அருச்சுனன் குந்தி புத்திரர்
நகுலன், சகாதேவன் மாத்திரி புதல்வர்கள்

பாண்டுவிற்குப் புத்திரர் இல்லை
பத்தினி பெற்ற புத்திரர்க்கு-பாண்டு தந்தையுமில்லை

குந்தி புத்திரர்க்கு ஏது இராச்சியம் ?,
பாண்டு புத்திரனுக்கே பாதி இராச்சியம்-
துரியோதனன் வாதம், மனுஸ்மிருதியின் வேதம்




“நியோகத்தால்”பிறந்த குரு வம்சத்து வாரிசுகள்
வந்த வழி தெரிந்தும், வர்ணாச்சிரமத்தில் நின்று
குருஷேத்திரத்தில், குலதர்மம் பேசும் ஆச்சாரம்”
வர்ணாச்சாரமோ ஆளும் வேதம்




பெற்ற மகனை கங்கையில் விட்ட க்ஷத்திரிய இளவரசி குந்தி,
கண்டெடுத்த குழந்தையைப் பாலூட்டிச் சீராட்டித் தன்
மகனாய் வளர்த்த தேரோட்டி அதிரதன் மனைவி ராதையோ
அன்புத் தாய், கல்வியறிவில்லாச் சூத்திர குலமங்கை

வில்லெடுத்து வீரம் வளைய-தோள் வலிமையை
கர்ணன் காட்டியதோ அழகு, சுடு சொல் எடுத்து
சாதியம் பேசி தேரோட்டி மகன் என இகழ்ந்ததோ
கற்றவருக்கும், உயர் குலத்தவருக்கும் இழிவு




ஜாதி கடந்து கர்ணனின் வீரத்தைப் போற்றிப்
புகழ்ந்த கௌரவன், அங்கதேசத்து அரியணையும்,
அரிய நட்பையும் அளித்தே, திறமைக்கு
கௌரமளித்த புருஷோத்தமன் துரியோதனன்

வள்ளலாய்க் கர்ணன் வாரி வழங்கிட-தன் செல்வத்தை
அள்ளி வழங்கிய மன்னன், கரம் பட்டு துணைவியின்
மணிமேகலை அறுந்திட, சிதறிய மணிகளை பொறுக்கவோ,
கோர்க்கவோ, எனக் கேட்டு நட்பைக் காத்த கோமகன்



சாதிய தீயில் வெந்து, புடமிட்ட பொன்னாய் ஒளிர்ந்து
வள்ளலாய்-நண்பனாய் வாழ்ந்து -உயிரையும்
வழங்கிய சூரியபுத்திரன் ஜாதி கடந்த மனுபுத்திரன்




அம்பை, காந்தாரி மனங்களை நோகடித்து
மணவாழ்வைச் சிதைத்தவனோ பெண் மனம் அறியாத
நைட்டிக பிரம்மச்சாரி கங்கா புத்திரன் பீஷ்மன்
அஸ்தினாபுரியைக் காப்பது கடன் என்ற க்ஷத்திரியன


நாட்டையும், தம்பியரைத் சூதாடித் தோற்று, தாரத்தையும்
பந்தயப் பொருளாய் தோற்ற க்ஷத்திரிய தருமவான்
யுதிஷ்டிரனோ சூதாடி, என்றும் தருமமே தெய்வம்
என வாழ்ந்த சூத்திர விதுரனோ ஞானி

அர்ஜூனா யார் இழிந்த பிறவிகளோ அவர்களும், பெண்கள்,
வைசியர்கள் மற்றும் சூத்திரர்களும் என்னைச் சார்ந்திருந்து
நிச்சயமாக, மேலான கதியை அடைகிறார்கள்(9-32)

முனிவனையும், தேவனையும் வருத்திடும் காமம்,
பதினாராயிரம் மனைவியர் கொண்ட கிருஷ்ணனோ
தாய்க்குலத்தை பாவயோனியர் என இழிவுசெய்யும் ஈனம்
ஐயப்பனோ, ஹரி, ஹரனுக்கு புத்திரனான விநோதம்?



விளை நிலமாய் பெண், ஆண் விதைக்கும் வித்தோ
கருவூலம் சேரும் பொன்? பீஜமே உயர்வு, யோனியோ தாழ்வு
நிலம் சிறப்பில்லை, விதையே சிறப்பு, கருக்கட்டலை அறியாத
மூடன், மாதர் கற்பிலார் எனக் கூறும் வேசி புத்திரன் மனு?



பொய்மையின் வடிவம் மாதர்-மாதர் பிறவியைத்
தூயதாக்கும் சமஸ்காரங்களும், மந்திரங்கள் ஏதுமில்லை,
படுக்கை, ஆதனம், அழகு செய்தல், காமம், பொய், துரோகம்
இவற்றை மாதரின் பொருட்டே மநு படைத்தான் சாஸ்திரம்


ஆரிய வேதங்கள் பிறந்ததும், முனிகள் வாழ்ந்ததும்- கற்பனை
சரஸ்வதி நதிக்கரையிலே, தீண்டாமையை ஆதிசங்கரன்,
அத்வைத சங்கரனுக்கு விளங்கியதோ கங்கைக் கரையிலே,
ஷண் மதங்களை வகுத்தது சாதிய ஆதி சங்கரனே



கங்கையும் போக்காத பாவமாய் ஜாதியம்?
காதலுக்கு ஜாதியில்லை, மதமில்லை-வள்ளியை
காதல் மணம் புரிந்து குமரன் சொன்ன வேதம்



குரு தட்சணையாய் கட்டை விரலை கேட்ட
குருத்துரோணன் மனதிலே சாதியத்தின் சகதி-
குருதட்சணைாய் விரலை கொடுத்த வேடுவன்
ஏகலைவன் இதயத்திலோ க்ஷத்திரிய குருபக்தி



வைதீகமாயிருந்தாலும், லௌகீகமாயிருந்தாலும்
அக்கினி எப்படி தெய்வமாயிருக்கிறதோ-அப்படியே
மூடனாயிருந்தாலும், ஞானியாயிருந்தாலும்
பிராமணனே மேலான தெய்வம்-(மனுஸ்மிருதி 9-318)

நான் "வேள்வி" செய்யாவிட்டால் உலகமழியும்,
ஜாதிக்கலப்பு ஏற்படும் (3-24) , அதர்மம்
ஓங்கும்போதெலாம் தோன்றும் தர்மம்-வர்ணாச்சிரம
அதர்மத்தை அழிக்கத் தோன்றாத மாயம் (4:7)

காமம், கோபம், பணத்தாசை நரகின் வாசல் -(16. 21)
பிராமணனுக்கே சொர்க்க வாசல்?, உயிர்கள் எனது
அம்சம், பரமாத்மாவில் ஜாதிகளின் சங்கமம-(15:7)

வேள்வியில் ஈடுபடாதவனுக்கு இவ்வுலகம் கிடையாது
சொர்க்கலோகம் எங்கே?-(4:31), உன்னை உன்னாலே
உயர்த்திக் கொள்-இழிவுபடுத்தாதே, நீயே உனக்கு
நண்பன், நீயே உனக்குப் பகைவன்(6:5)

மகனே, நன்மை செய்பவன் இழிவடைவதில்லை. (6: 40)
எல்லா உயிர்களிலும் இருக்கிற ஆன்மா “நான்”-(10:20)
வீடோ இறை வாழும் கூடு, அறிந்தவனோ ஞானி (13:1)
பின் ஏனோ இந்த வர்ணாச்சிரம சிறைக் கூண்டு?

எல்லோர் இதயத்திலும் நிலைத்திருப்பவர்-(13: 17)
எல்லா உயிர்களிலும் சமமாக உறைபவர் (13:27)
எங்கும் நிறைந்த இறைவன், ஆன்மாவாய் ஒளிரும்
அருட்பெருஞ்சோதி, சூத்திர இதயம் கடந்த ஜாதி?

பிரம்ம சூத்திரங்களிலும் ஆராய்ப்பட்டுள்ளது, (13:4)
சாஸ்திரமே பிரமாணம்- பகவானின் முரணான வாதம்
கீதையிலும் ஆதிசங்கரனின் வாடை, மானுடத்தை
சாதியச் சிறை வைத்த பார்பனக் கீதை (15-24)

வேதங்களோ புனிதமானவை, குறைகளற்றவை
வேதங்களை திறனாய்வு செய்து கேள்விகளை எழுப்புதல்
தவறு, யாகம், சடங்கு, பிராமணர்க்குத் தானம்-ஆன்மா
கடைந்தேற உகந்த உபாயம், பார்பனியப் பித்தலாட்டம்

என்னை நீ எவ்வாறு கண்டிருக்கிறாயோ அவ்வாறு காண
வேதங்களாலும், தவத்தாலும், தானங்களாலும்,
யாகங்களாலும் முடியாது, வேதங்கள் இறை வெளிபாடு
பகுத்தறிவுக்குக் முரணான குறைபாடு

வர்ணங்களுக்கிடையே சமத்துவம் கூடாது,
உரிமை, சலுகைகளிலும் பிரமணனே உயர்ந்தவன்
சூத்திரனுக்கோ எவ்வித உரிமையுமில்லை-
முற்பிறப்பின் வினைகளைப் பொறுத்தே மறுபிறப்பு

அந்தணனன் இழிதொழில் புரிந்தாலும் பிறவியால்
மேலோன், மண்ணில் வாழும் உயிர்களைக் கொல்லும்
பயிர்ச்செய்கை மேலான தொழில் அன்று (ம.ஸ.10- 73, 84)

ஆதி சங்கரரின் பஜ கோவிந்தம் மூன்றாவது சுலோகம் இது! [நாரிஸ்தனபர நாபிதேசம் த்ருஷ்ட்வா மா கா மோஹாவேசம் எதன்மான்சவசாதிவிகாரம் மனசி விசிந்தய வாரம் வாரம்]

வெறியூட்டும் இளவனிதையர் தோற்றம், வெறுந் தோல் மூடிய சதைகளின் மாற்றம்,வெறுப்பூட்டும் இந்த உண்மையை உணர்வாய்.

மறவாதிருக்கப் பலமுறை நினைப்பாய்.

“Seeing the seductive female form, do not fall prey to frenzied delusion. That (female form) is (but) a modification of flesh and fat. Think well thus in your mind again and again.”

இதன் சாரம் பெண்கள் மோசமானவர்கள் அவர்களை நம்பக்கூடாது என்பதுதான். இப்படி பெண்களைப் பற்றி மோசமாக எழுதியவரைத்தான் மேன்மை மிகு பெண்கள் குலம் அவதார புருஷராக பூசித்து வருகிறது! காலம்தான் இவர்கள் கண் திறக்க வேண்டும்!

Human rights abuses against these people, known as Dalits, are legion. A random sampling of headlines in mainstream Indian newspapers tells their story: "Dalit boy beaten to death for plucking flowers"; "Dalit tortured by cops for three days"; "Dalit 'witch' paraded naked in Bihar"; "Dalit killed in lock-up at Kurnool"; "7 Dalits burnt alive in caste clash"; "5 Dalits lynched in Haryana"; "Dalit woman gang-raped, paraded naked"; "Police egged on mob to lynch Dalits".

"Dalits are not allowed to drink from the same wells, attend the same temples, wear shoes in the presence of an upper caste, or drink from the same cups in tea stalls," said Smita Narula, a senior researcher with Human Rights Watch,

and author of *Broken People: Caste Violence Against India's "Untouchables."*

சூத்திரனுக்கும், பிராமண, க்ஷத்திரிய, வைசிய,
பெண்களுக்கும் கல்வி கற்கும் உரிமையில்லை, சூத்திர
ஆண், பெண்களுக்கு மேலாடை அணியத் தடை,

மேலாடைக்காய் போராடிய சூத்திர நங்கை
நங்கோலி, வரி செலுத்து மறுத்து, கொங்கைகளை அறுத்து
வரியாய் செலுத்தி, சனாதனத்தை சாடிய அறப்புரட்சி



விலங்கைப் பலி கொடுத்து சொர்க்கம் செல்லமுடியும்
என்றால், தம் பெற்றோரைப் யாக பலியாக்குதல்
நன்றன்றோ?, மிருகவதை தீதன்றோ?-
பகுத்தறிவுச் சிந்தனையாளராய் போதிசத்துவர்



சத்தியம் வேள்வியாக, அறம் வாழ்வாக
தாழ்ந்தோரை உயர்த்துபவனே பிராமணன்
தன்னை ஆண்டு- எளியோரைத் தீமையிலிருந்து
காத்து நீதி காப்பவனே-க்ஷத்திரியன்

அறம் நின்று பொருள் தேடி, இருப்பதை
இல்லாதவரோடு பகிர்ந்து இன்புறுபவனே -வைசியன்
எல்லோரும் நலம் வாழ-எம் கடன்
பணி செய்து கிடப்பதே என வாழ்பவனே சூத்திரன்

இயல்பிற்கேற்ப நம்பிக்கை, நம்பிக்கையின் விளைவே
மனிதன், நம்பிக்கையின் உருவாக்கமே மனிதன்-(17-3)
நம்பிக்கையோ உண்மையை அறியத் தடைக்கல்
தடைக்கல்லோ படிக்கல்லானால் சத்தியமோ தரிசனம்






பிராமணரிடத்து வணக்கமின்மையாலும்,
உபநயன முதலியவற்றை விட்டொழித்தலாலும்
க்ஷத்திரிய ஜாதிகள் திராவிடர் உட்பட
நாளடைவில் சூத்திர ஜாதிகளானார் (ம.ஸ.10-43)


வேதமோதியுணர்ந்த அந்தணர்க்கு அன்புடன் பணி புரிவதே
சூத்திரர் மோட்சம் எய்தும் வழியாகும் (மனுஸ்மிருதி-9-334)
பிரதிலோம, அனுலோம ஜாதியினர் சம்பந்தத்தால் பிறக்கும்
பாகிய ஸாதி தீண்டத்தகாதவர் ஆகும் (ம.ஸ. 10.25)

பிறவி மேன்மையால் அந்தணன் தேவராலும்
போற்றப்படுகிறான், எனவே மனிதரில்
அவனே சிறப்பானவன், அந்தணப் பணியே
சூத்திரனுக்குத் தவம் (ம.ஸ.10- 84. 235)

ஓம் தத், ஸத் என்று இறைவன் மூன்றுவிதமாக
அழைக்கப்படுகிறார், அவரிலிருந்தே முற்காலத்தில்
பிராமணர் படைக்கப்பட்டனர், வேதங்களும்
யாகங்களும் தோன்றின (ப.கீ.17-23)



வேள்வியோ உயர்ந்த வழிபாடு-வேள்வியாலும்
அவதாரத்தாலும் மாற்றமுடியாத சாபமாய் தீண்டாமை
நிலைப்பாடு, பகுத்தறிவால் ஆய்ந்து பார்-சனாதனமோ
பௌத்தத்திற்கெதிரான பார்ப்பனிய கோட்பாடு



பார்ப்பனரோ தெய்வத்தின் ஒப்பனை மாயக் கற்பனை
தலித்துக்களின் வாழ்வோ எரிநரகான ஒப்புமை
பரம்பரையலகில் எழுதாத பார்ப்பனிய வர்ணம்,
பார்தீபனும் போற்றி வணங்கிட யாத்த தந்திரம்

மனிதர்களின் குணம், மற்றும் செயல்களுக்கேற்ப
வருணம், குணம் செயல் மாறினும் மாறாததோ சாதியம்-4-13
நான் எல்லா உயிர்களிடத்தும் சமமாக இருக்கிறேன்-9-29
பகவானே, பின் ஏனோ இந்த இழிந்த சாதியம்?

யார் இந்த எனது கருத்தை இகழ்ந்து பேசுகிறார்களோ
அவர்கள் வாழ்க்கையை இழந்தவர்கள்-(3-32)
நிறைவில்லாததாக இருந்தாலும் சொந்த தர்மத்தை
பின்பற்றுவது சிறப்பானது-(3-35)



மடிந்தபின்னர் சொர்க்கம் என்னும் மதங்கள்
வாழும்போது வறிய கல்வியறிவில்லாத மானுடத்தை
எரிநரகில் வாட்டும் மேட்டுக்குடி பார்ப்பனிய நலன்கள்
முன்வினையே உன் சாதி மூடர் வாதங்கள்



வர்ணாச்சிரமமோ கிருஷ்ண லீலை-கிருஷ்ணனோ
பிராமணிய துதிபாடும் சமஸ்கிருத மேதை,
ஈரடியும், நாலடியும் சொல்லும் வாழும் கலையோ
ஈடிணையில்லாத மனிதநேயக் கீதை

தவமில்லாதவன், பக்தியில்லாதவன், சேவை செய்யாதவன்,
என்னை நிந்திப்பவன், இவர்களுக்கு ஒரு போதும் நீ
இந்தக் கீதா உபதேசத்தைச் சொல்லக்கூடாது (18-67)

பகுத்தறிவுக்குத் தடை போடும் உபாதை
சாதியத்தை நிலை நிறுத்த - பிராமணருக்கு
பிரம்மாஸ்திரமான பெருமாளின் கீதை


கீதையும் வர்ணாச்சிரம தர்மத்தின் குரலானால், மனுஸ்மிருதியும்
பாஞ்ச ஜன்யமும் சாதியத்தின் சங்கொலியானால்- பகவத்
கீதையும் வீடு சேரப் பாதையாகுமோ?-வாழும் கலையாய்
வள்ளுவன் வகுத்த தமிழ் மறைக்கு சனாதனம் நிகராகுமோ?

மனிதர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென-
நீங்கள் விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும்
மற்றவருக்கும் செய்யுங்கள்-(பொன் விதி)

Dr. B.R. Ambedkar, an Indian jurist, economist, politician, and social reformer, embraced Buddhism on October 14, 1956[123]. He converted to Buddhism along with 365,000 of his Dalit followers in Nagpur, India [12]. Ambedkar's conversion to Buddhism was a significant moment in Dalit history as it marked a moment when Dalits in the country got a new impetus and a voice that was hitherto constrained by the four-fold varna system dominating Hinduism [1]. Ambedkar had long been frustrated by the basic tenets of Hinduism, and considered the inherent characteristics of the religion, particularly the caste system to be a bigger threat to freedom in Indian society than that of the British [1]. Unlike Mahatma Gandhi, who considered the internal reform of the caste system to be the way forward, Ambedkar believed that the only way the Dalits could find a place for themselves in Indian society was by way of conversion

பகுத்தறிவை மழுங்கடிக்கும் பார்ப்பனப் படைப்புகளாய்
வேதங்கள், பகவத் கீதை, மனுஸ்மிருதி, காமப்புராணங்கள்,
உபநிடதங்கள் வேததாந்தம் என்ற நியதி, -வேதங்கள்
வார்த்தைக் குப்பைகள் பெருமான் புத்தரின் ஞான நீதி

சாதியம் நம்முள்ளே-பிறப்பில் சாதியம் இல்லை
நல்மனதில் சாதியும் இல்லை-தோல் நிறங்கள் மாறினும்-
கண்ணீர், குருதி நிறம் மாறவில்லை, பசி, காமம்
தேவரையும், முனிவரையும் வாட்டும் நிலை



உள்ளம் கோயிலாக-மனிதம் தெய்வமானால்-உலகே
சொர்க்கமாகும், உனக்கு நீயே ஒளியாகிப் போ
உண்மையே உங்களுக்கு விடுதலையளிக்கும்
பெருமான் புத்தர், இயேசுவின் மாறாத போதனை

சமணமும், பௌத்தமும் இயம்பிட்ட சமதர்மத்திற்கும்,
அகிம்சைக்கும் நிகரான அறம் உலகில் ஏதுமில்லை
சாதியத்தை சாமர்த்தியமாய் வேதம் என ஓதி, சமண,
பௌத்தத்தை ஒழிக்கும் வேதியர் சூது மாறாத நிலை


அன்பு, உண்மை, அகிம்சை வாழ்வானால் அமைதி நமதே
யாதும் ஊரே யாவரும் கேளீர், யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகமும் காலமெல்லாம் ஒலிக்கும்




வேதாந்தப் பார்வையில் எங்குமிருப்பது பிரம்மம்
சுயதர்மமப் பாதையில் செய்யும் தொழிலே தெய்வம்
கடமையைச் செய் பலனை எதிர்பாராதே கர்மயோகம்
அவனின்றி அனுவும் அசையாது-பக்தியோகம்

தத்துவப் பாதையில் ஆணவமே தடை, கழித்துவிடு
சரணாகதி யோகத்தில், தருமம், அதர்மம் கடந்து
இறைவனைச் சரணடைந்து கடமையைச் செய்
பரிபூரண சரணாகதியே விடுதலை

பிரம்மம் என்னும்போது தத்துவம்,-இறைவன் நம் தந்தை
என்னும் போது சொந்தம், ஏற்றத் தாழ்வுகளற்ற இரத்த பந்தம்,
உன் கடவுளாகிய ஆண்டவரை உன் முழு அறிவோடும்,
ஆற்றலோடும், இதயத்தோடும் அன்பு செய்
உன்னைப்போல் உன் அயலானை நேசி,
பெருமான் இயேசுவின் போதனை




கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக
புராணங்களும், வேதங்களும் சுருதி தப்பிய கானம்
வாழ்ந்தறியும் உண்மையே தேவராகம்




தம் சாயலாய் இறைவன் மனிதனைப் படைத்தார்-மானுடப்
பிறப்பில் ஏற்றத் தாழ்வுகள் இல்லை, முக்குணங்களால்
சொல், செயல், சிந்தனையால் வேறுபடும் மனிதன்
தன்னைப்போல் அயலானை நேசித்தால் அவனோ புனிதன்

மனிதனுக்கே சமையம், மதவாதிகளுக்கோ அபினியும்
போதையுமாய் வேதிய சனாதனம்-தென் ஆபிரிக்காவில்
நிறவெறி சுட்டிட விழித்த காந்தியின் தன்மானம்-எரி நரகில்
தீண்டாதோர் வாழ்வதை அறிந்தும் அறியாத கல்மனம்

தீண்டாதவருக்கு ஹரிஜனன் பெயர் சூட்டிய வைசிய
அரசியல்வாதி, சமூகத்திற்கே ஜாதி, சமயத்திற்கு அன்று,
நான்கு ஜாதிகள் இன்று எங்கே உள்ளன? நான் காணவில்லை
என்ற சுவாமி விவேகானந்தரோ காயஸ்த சனாதனவாதி (ஞானதீபம் 5. 281)



பகுத்தறிவு, சுதந்திரச் சிந்தனைக்கு தடைபோட்ட சனாதனம்
வேதங்களை நிராகரித்த க்ஷத்திரிய ஞானமாய் உபநிடதங்கள்
சமானியனும் இன்புற்று வாழ, பகுத்தறிவால் ஆய்ந்தறிய
சமதர்மத்தை போதித்த சமணம், பௌத்தம், சாங்கியம்.



சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்தாழ்ச்சி,
உயர்ச்சி சொல்லல் பாவம், நீதி. உயர்மதி, கல்வி,
அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்
சுத்த அறிவே சிவமென்று கூறுஞ் சுருதிகள் கேளிரோ?

பல பித்த மதங்களிலே தடுமாறிப் பெருமையழிவீரோ?
உள்ள தனைத்திலும் உள்ளொளியாகி ஒளிர்ந்திடும் ஆன்மாவே-
இங்கு கொள்ளக் கரிய பிரமமென்றே-மறை கூவுதல் கேளிரோ
மெள்ளப் பல தெய்வம் கூட்டி வளர்த்து வெறுங்கதைகள் சேர்த்து
பல கள்ள மதங்கள் பரப்புதற்கோர் மறை காட்டவும் வல்லீரோ?

சூத்திரனுக்கும் பூணூல் போட்ட புரட்சிப் பாவலன் பாரதி
சனாதன சாதியத்தை கவிதைகளால் சாடிய புதிய மனுநீதி

வள்ளுவர் செய்த திருக்குறளை-மருவர நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஸ்மிருதி?, ஒரு சாதிக்கு ஒரு நீதி, சாதியைச்
சொல் நீதியைச் சொல்கிறேன் கூறியவரோ காஞ்சி பீடாதிபதி



சாதியம் சமூகக் கட்டுப்பாடு, சனாதனமல்ல,
சூத்திரர் உயர்ந்திட சாஸ்திரக் கல்வி
சமஸ்கிருதமே மார்க்கம் முழங்கிய மேதை
விவேகானந்தரோ சனாதன விற்பன்னர்


Violence, Discrimination

More than 160 million people in India are considered "Untouchable"—people tainted by their birth into a caste system that deems them impure, less than human.
B Y

சாதிய நரகில் வெந்து சாயும் மானுடம்-தலை நிமிர்ந்து வாழ
சத்தியத்திற்கு குரல் கொடுத்த புதிய மனுபுத்திரன் அம்பேத்கார்
தன் சாதி சனங்களோடு, சனாதன தருமத்தைப் புறந்தள்ளி
கிறிஸ்தவம், இஸ்லாம் கடந்து பௌத்தம் தழுவிய ஞான புத்தன்

சாதியம் கடந்த சமண, பௌத்தத்தை ஓரம் கட்டி
உயர்ந்து எழுந்த வேதியப் பொய்கள், கல்லையும்,
சிலைகளையும் வழிபட்டு-மனிதத்தை புறந்தள்ளிய
சனாதனத்தின் அதர்மமாய் பாரத வரலாறு

நன்மை, தீமை இருமையில் ஊசலாடும் மனம்-
உள்ளுணர்வில் உயர்ந்தால் அவனோ தெய்வம்,
தாழ்ந்தால் அவனே நரகம், மனிதா நீயோ தெய்வம்
நீயே உனக்கு மீட்பன், உனக்கு நீயே ஒளியாகிப்போ




திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபையில்-
நாமெல்லாம் இந்துக்கள்
முழங்கிய சுவாமி விவேகானந்தர்-நாமோ
முழு முதற் கடவுள் சிவபெருமானைத் தொழும் சைவர்,
ஆரிய வேத அடிவருடிகள் அல்ல
முழங்கியவரோ மனோன்மணியம் சுந்தரனார்




சுவாமி விவேகானந்தரின் வாழ்வோ சபர்மதி காந்திக்கு
ஆடம்பரம், உணவு, நீர், உடை, கல்வியின்றி அல்லாடும்
ஹரிஜனர் வாழ்வோ மாமனிதன் அம்பேதகாருக்கு
தீண்டாமை சிருஷ்டித்த எரி நரகம் -

குமுறிய மனம், வாழ்நாளெல்லாம் தீண்டாடையை
எதிர்த்துப் போராடி, காந்தியின் முகமூடியைக் கிழித்து
சனாதனம் கடந்து தம்மத்தை சரணடைந்த தேவ குணம்

உண்மையின் பேர் தெய்வம் என்போம்-அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம்-பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்- மகா கவி






சாதியச் சிறை மீள ஒரு பிறவி போதாது-வேதியனைத்
தெய்வமாய்த் தொழும் இழிநிலை மாறாது, மாறாதது
சனாதனம், மதம் மாறினால் ஒழிய விடுதலை கிட்டாது

வேதம், சாதி, மனுஸ்மிருதியாய் சனாதனம் .,
சம நீதி, சமதர்ம கோட்பாடோ உதாசீனம்,
உயர் கல்வியால் உயர்ந்து, நீதியால் நிமிர்ந்து,
சாதியம் ஒழியப் பேராடிய மாமனிதன் அம்பேத்கார்

மதமே மனிதனையும், இறைவனையும் இணைக்கும் மையம்
அரசியல்வாதி மேட்டுக்குடி காந்தியின் சந்தர்பவாத வேதம்
சாதியம், தீண்டாமை சனாதனத்தின் அருவெறுப்பை கருவறுக்க
மனிதமே மதத்தின் மையம் அம்பேத்காரின் சங்கநாதம்

Dr. B.R. Ambedkar and Mahatma Gandhi had differing views on several key issues, including the caste system, untouchability, and the rights of the Dalit community in India. While Gandhi believed in the varna system and sought to reform it from within, Ambedkar advocated for the complete annihilation of the caste system and fought for the rights and upliftment of the Dalits.

Their differing ideologies led to several debates and conflicts between the two leaders, with both of them representing different perspectives on social justice and equality in India.



சாதியம், தீண்டாமை ஒழித்து, மதச்சார்பற்ற,
சுதந்திர பிரஜைகளாய் மானுடம் வாழ
அரசியல் சாசனமே வழி அம்பேத்காரின் வாதம்


சாதியம், தீண்டாமைக்கு சனாதனம் காரணமல்ல
அரசியலும், மதமும் பிரிக்கமுடியாத உறவு,
காந்தியின் இராம ராஜ்சியக் கனவு

பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம், இறந்தவன்
பிறப்பது உறுதி. பரிகாரம் காண முடியாத இதில்
நீ கவலைப்படுவது பொருந்தாது- (2-27)


பகவானுக்கே தெரியாத பரிகாரம்- உண்மையே
விடுதலையளிக்கும் புத்த பெருமான், இயேசுவின் மெய்ஞானம்,
எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு வள்ளுவன் கீர்த்தனம்

சாதியமோ மதப் பயங்கரவாதம்
குணம் மாறினாலும் மனம் மாறாத வருணம்,
பாவயோனியில் பிறந்தவனுக்கு ஏது கீரிடம்?,
சாதியமோ பிறப்பின் அடிப்படை-***கீதையிலும்***
மதப் பயங்கரவாதத்தின் இரத்த வாடை
மனிதத்தை அடிமை கொள்ளும் மதப்பீடை

சாதியம் என்பது சனாதனத்தின் கோட்பாடு
கீதையிலும், மனுஸ்மிருதியிலும் மானுடத்தைப்
பிரிக்கும் அநீத வர்ணாச்சிரம நிலைப்பாடு




காளி பக்தர் சுவாமி விவேகானந்தர்-காளியைத் தரிசிக்க
சாதியத் தடை விதித்த கொடுங்களூர் காளி கோயில் பூசகர்,
கடல் கடந்து சென்றவனுக்கு ஆலய தரிசனமில்லை
தக்ஷனேசர் ஆலய தரிசனத்திற்கும் தடையான சாஸ்திரம்



சாதியம், பார்பனனர் சதியாக , சூத்திரன்
நெற்றியில் சாதியம் இட்ட சூடு,
ஆறாத வடுவாக-சனாதன தர்மத்தின் சூது

சாதிய வேள்வியை சாஸ்திரம் வகுத்து வேதியர் யாக்க
ஆகுதியாய் சூத்திர ஜாதி வெந்து கருக
க்ஷத்திரியர் கரங்களில் செங்கோல்-பார்த்தனும்
வணங்கிட, பார்பனர் கரங்களில் வேதம்



பிறப்பினாலோ, கோத்திரத்தினாலோ ஒருவர் பிராமணர்
ஆகமாட்டார், யாரிடத்தில் உண்மையும், தர்மமும் உள்ளதோ
அவரே தூய்மையானவர், அவர்தான் பிராமணர் ஆவார்-
புத்த பெருமானின் வாதம், (தம்ம பதம் பி.வ.11)

வேதம் கேட்ட சூத்திரன் காதில் காய்ச்சிய ஈயத்தை ஊற்று,
வேதங்களைத் தூக்கி குப்பையில் போடு, தம்மமே பாதை,
உண்மையே விடுதலை, உனக்கு நீயே ஒளியாகிப் போ
பெருமான் புத்தரின் மாறாத வாழ்வியல் கோட்பாடு


சமத்துவம், சமதர்மம் இல்லாத சனாதன வேதம்
உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வர்க்க பேதம், முன்னோர்
சொன்னார், வேதம் சொல்கின்றது வரண்ட பிடி வாதம்
பகுத்தறிவால் ஆய்ந்தறி, உண்மையே வேதம்



ஒழிக சாதிய சனாதனம்-ஓங்குக மனித நேயம், அன்பு, உண்மை,
சமத்துவம் நிறைந்த வாழ்வே தெய்வீகம், அன்பினால் இன்புற்று,
ஏழைகளுக்கு ஆற்றுவதோ மெய்யான சேவை, சகல உயிர்களும்
நலமாய் வாழ வேண்டுவதோ பிரார்த்தனை

தீயை வளர்த்து, தீயில் படைத்து வேள்வி
செய்யும் பிராமணன், தீண்டாமை எரிநரகை
சாத்திரங்களால் படைத்து ஏழையரை
வாட்டும் இழிந்த பஞ்சமா பாதகன்


பிறப்பினால் வகுத்த சாதியமோ இழிது, சற்குணத்தாலும்
வருணத்தை மாற்ற மடியாத வேதமோ தீது
சமஸ்கிருதம் வேதமோழி, தமிழ் நீஷ மொழி
ஓதுவதோ பார்ப்பனிய அநீதி



நெய் வார்த்த தீயில் சீதையை நீராட்டி
ஏற்றவனோ, பின்னாளில் பொய் வளர்த்த
வண்ணான் கதையால் கர்ப்பிணியை
வனம் அனுப்பிய ஶ்ரீராமனோ-அவதார புருஷன்

The latest theory of **Aryan migration** to India is that the **Arya** were central Asian Steppe pastoralists who arrived in India between roughly 2000 BCE and 1500 BCE, and brought Indo-European languages to the subcontinent [1]. The Arya migration into India is supported by a peer-reviewed paper titled 'The Formation of Human Populations in South and Central Asia' published in the journal Science [1]. The paper is co-authored by 117 scientists and provides evidence that there were significant migrations from the Central Asian Steppe that most likely brought Indo-European languages into India [1]. The paper also confirms that the primary source of ancestry in modern South Asians is a prehistoric genetic gradient between people related to early hunter-gatherers of Iran and Southeast Asia [1].

இராம இராஜ்சியமோ மாயக் கற்பனை, சமண
பௌத்தத்தை அழிக்க படைத்த, இராமாயணம்,
மகா பாரதம், காமப் புராணங்களோ
பார்பனிய மேலாதிக்க ஒப்பனை



மாபாலியை ஏமாற்றிய வாமனனும் -பெற்ற
தாயைக் கொன்ற பரசுராமனும் பிராமணனர்
கிருஷ்ணனும், இராமனும் கறுப்புச் க்ஷத்திரியர்
மச்ச, கூர்ம, வராக, நரசிம்மமாய் அவதாரங்கள்

மடிந்த பின் சொர்கம் என்னும் வேதமோ
மாயக் கற்பனை, வாழும் போது-சூத்திரன்
வாழ்வை எரிநரகாக்கிய உண்மை-

பிரம்மம் அழிவற்றது, மேலானது, அதன் இயல்பு
ஆன்மா என்று சொல்லப்படுகிறது.(8-3) பிறந்தவனுக்கு
மரணம் நிச்சயம், இறந்தவன் பிறப்பது உறுதி, பரிகாரம்
காண முடியாத இதில் நீ கவலைப்படுவது பொருந்தாது (2-47)



நீதியை அறிந்தவன் கீதையைக் கேட்டு குழம்பியதோ
உண்மை, கடமையைச் செய் பலனை எதிர்பாராதே-
வென்றால் தேசம், மடிந்தால் வீர சொர்க்கம்,
பசப்பியவனோ பலன் கூறும் பகவான்?


கீதையிலோ சாதியம், வேதியரோ தெய்வம்
பௌத்தமோபகுத்தறிவின் பாதை,
அன்பே தெய்வம், உண்மையே பாதை
மைத்திரேய புத்தரின் கீதை

சிங்கங்களைவிட்டு விட்டு செம்மறி ஆடுகளைப்
பலி கொடுக்கும் மதங்கள்,-தீண்டாமையால்
மனிதத்தை நரபலியாகிட்ட மத வேசித்தனங்கள்

பிரம்மம் என்பது மாயக் கற்பனை,
மாறுபடும் உலகில் நிலையானது ஏதுமில்லை
முழங்கியவரோ பெருமான் புத்தர்




கற்பனை வேதங்களும், புராணப் பொய்களும்
மனித சிருஷ்டித்த கடவுளருமாய் சனாதனம்,
வார்த்தைக் குப்பைகளில் சாதியம்-பகுத்தறிவுச்
சிந்தனையிலோ சமத்துவ சன்மார்கம்




போரை விரும்பாத குந்தி புத்திரன் , கௌரவன்
துரியோதனன் மனதை அன்பால் வெல்ல முடியாத
சக்திமானோ கிருஷ்ணன்,-க்ஷத்திரிய தருமம் போர்
வலியுறுத்தி மூளைச் சலவை செய்த பகவானோ கேசவன்

சாதியம் சனாதன தர்மமான அதர்மம், சாதியத்தை ஒழிக்க,
சாதிய வேதத்தை அழிப்பதே மனித நேய தர்மம்,
இது புதிய குருஷேத்திரம், வில்லை எடுத்து நாணேந்று
ஏகலைவா, அன்பே வேதம், சத்தியமோ தரிசனம

நான் பசியாய் இருந்தேன் உணவு தந்தீர்,
தாகமாய் ஈரந்தேன் பருகத் தந்தீர்,
ஆடையின்றி இருந்தேன் உடை தந்தீர்
நோயுற்று இருந்தேன் என்னைப் பராமரித்தீர்,
சிறையில் இருந்தேன் பார்க்க வந்தீர்,
என் சகோதரர் நீங்கள்





துன்புறும் மனிதரில் தன்னைக் காண அழைத்த
இயேசு பெருமான், மனிதநேயமே இறை தன்மை,
மனிதமே, மதத்தின் மையம், வாழ்வும், போதனையும்
ஒன்றாக வாழ்ந்து காட்டிய மனுமகன்

சாதியம் கடந்த மனுமகன், பாவி, விபச்சாரிகளோடு
உண்டு குடித்து உறவாடிய மைத்திரேயன், அன்பே கடவுள்,
இறைவன் நம் தந்தை, எதிரியையும் அன்பு செய்யுங்கள்,
நாம் சகோதரர் என்ற மதம் கடந்த ஆன்மீகன்

மனிதத்தை மையப்படுத்தி, அன்பே தெய்வம் என்ற போதனை,
பலியை அல்ல, இரக்கமே இறை விரும்பும் காணிக்கை,
நொருங்கிய இதயத்தை இறைவன் புறக்கணிப்பதில்லை

தந்தையும், மகனும் உறவாடத் இடைத் தரகர்கள் எதற்கு?
அன்பிறைவனோ மதவாத மதங்களில் இல்லை

மதம் கடந்து அன்பில் நிலைத்த
நல்ல சமாரியனைப் போற்றி, மதவாதிகள்
குரு, லேவியனைக் கடிந்த மனுமகனின் புரட்சி,
மதவாதம் காணாத எழுச்சி

என் தந்தையின் வீடு ஜெபவீடு, நீங்களோ
அதைக் கள்வர் குகையாக்கிய முறைகேடு, சினந்து
சாட்டையால் குடமுழுக்குச் செய்த கருணையின்
வெளிப்பாடு, ஆன்மீகம் காணாத புதிய ஏற்பாடு






அன்பே கடவுள், அன்பில் நிலைத்திருப்பவர்
கடவுளில் நிலைத்திருக்கிறார், கடவுளும்
அவரில் நிலைத்திருக்கின்றார்

உன்னைப்போல் உன் அயலானை அன்பு செய்
மனிதர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென
நீங்கள் விரும்புகிறீர்களோ-அதையே
நீங்கள் மற்றவருக்குச் செய்யுங்கள்

தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே இறையரசு
துன்புறும் மனிதனில் இறைவனைக் கண்டு
இரங்கி உதவுபனே உன்னத மனிதன்



Every human emotion, reaction, belief or judgment is an opportunity to 'remember' and experience the True Self; Infinite, Immortal Consciousness.


The True Self is the One that is utterly unaffected but completely aware.

Every human emotion, reaction, belief or judgment, positive, negative or neutral, is not who or what we are. They 'remind' us of what we are by being what we are not and could never be.

The Infinite, Immortal Awareness that we are is, has always been and will always be transcendent. It is untouched, pristine, pure yet completely aware of every minute detail and experience.

To experience the True Self is to experience Infinite Bliss, Infinite Peace, Infinite Wisdom, Infinite Awareness and the Ecstasy of Creation that are unchanging and ever present.

©2023, Jon Shore
www.lifesanswers.org



உண்மையே விடுதலையளிக்கும்,
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
சாதியம், பார்பனியம் கடந்த அன்பின் கீதை
கௌதம, மைத்திரேய புத்தர்களின் போதனை

என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்,
என்று மடியும், எங்கள் அடிமையின்
சனாதன மோகம்

வேள்வி செய்து, பிரம்மத்தை வழிபட்ட நாடோடி இனம்,
வேறு வழியின்றி -காலப்போக்கில், கடவுளரைத் திருடி,
புராணம், ஆகமம் தொகுத்து, பெருங்கோயில்களில்
புரோகிதர்களாய் மாறி, சனாதனம் எம் மதம்
சமஸ்கிருதம் தேவ மொழி எனக் கூவும் இனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-12-2023

பிரேம் நாத்பசாஸ் ஆங்கிலத்தில் எழுதிய நூலை - தமிழில் ‘இந்திய வரலாற்றில் பகவத் கீதை’ எனும் தலைப்பில் விடியல் பதிப்பகமும், சூலூர் வெளியீட்டகமும் இணைந்து வெளியிட்டுள்ளன. 1975ம் ஆண்டு, இந்நூலை எழுதிய பிரேம்நாத் பசாஸ் - ஒரு காஷ்மீரி. தந்தை பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு - கடவுள் மறுப்புக் கொள்கைக் கண்ணோட்டத்தோடு இந்த நூல் எழுதப்பட்டுள்ளது இதன் தனிச் சிறப்பாகும்.

premnath book on gita பெரியார் இயக்கத்துக்கான வரலாற்று ஆவணம் என்று கூறுமளவுக்கு, ஏராளமான வரலாற்றுச் செய்திகளை உரிய ஆதாரங்களுடன் தொகுத்தளித்துள்ளது. அதிலிருந்து சில முக்கிய பகுதிகள்:

* 700 சமஸ்கிருத கவிதைகளைக் கொண்டது பகவத் கீதை.

⁕ கீதை - இந்துமதத்தின் புனித நூலாகவும் - வழிகாட்டியாகவும் லட்சிய நூலாகவும் போற்றப்படுகிறது. அது மிகச் சிறந்த லட்சிய நூலாக இருந்திருக்குமானால், அந்த நூல் வெளிவந்த காலத்தில் நிலவிய மனித குலத்தின் சிக்கலான பிரச்சினைகளையும், கடும் துயரங்களையும் முன்னிலைப்படுத்தி விவாதித்திருக்க வேண்டும். கீதை அதைச் செய்யவில்லை.

⁕ கீதைக்கு ஏராளமான விளக்க உரைகள் வந்துள்ளன. அவை அனைத்தும், கீதையைப் புகழ்ந்து புகழேணியின் உச்சியில் ஏற்றுவதற்கே போட்டி போட்டன. கீதையின் முரண்பாடுகளைப் பூசி மெழுகி, சப்பைக் கட்டு கட்டுவதற்கான முயற்சிகளிலே அவைகள் இறங்கின.

⁕ கீதை உலகத்துக்கே வழிகாட்டக் கூடியது என்றும் சமூகத்தின் தலைசிறந்த ஒழுக்க நெறிகளைக் கூறுகிறது என்றும் கூறுகிறார்கள். அது உண்மையானால் பகவத் கீதையின் கோட்பாடுகளை முழு நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்ட இந்தியர்கள் - அறிவாற்றலிலும், தார்மீக நெறியிலும் ஏன் தாழ்நிலையை அடைந்தார்கள்? ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மனித முன்னேற்றத்தைப் பாழ்படுத்துவதற்கும் சமூகத் தீமைகளை வளர்ப்பதற்குமே கீதையின் போதனைகள் பயன்பட்டன.

⁕ கருத்து முதல்வாதத்தை முன் வைக்கும் - ஆன்மீகச் சிந்தனைதான் வேத காலத்திலிருந்து இந்தியாவில் இருந்து வரும் ஒரே சிந்தனை மரபு என்று கூறுவது வரலாற்று உண்மைகளை இருட்டடிப்பதாகும். கி.மு. 500 லிருந்து கி.பி. 500 வரை இந்தியா முழுதும் பகுத்தறிவு அடிப்படையிலான பொருள் முதல்வாத சிந்தனை மரபே நிலவியது. கீதை வலியுறுத்தும் கோட்பாடுகளையும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் ஆய்வு செய்ய வேண்டுமானால், திட்டமிட்டே மறைக்கப்பட்ட இந்த வரலாறுகளை முதலில் நாம் வெளிச்சத்துக்குக் கொண்டு வர வேண்டும்.

⁕ பவுத்தத்தை ஒழிப்பதற்கு - 9ம் நூற்றாண்டில் ஒரு ஆயுதமாகப் பயன்பட்டது, இந்தப் பகவத் கீதை தான்.

⁕ பார்ப்பனர்கள் - வரலாற்றை எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தார்களோ அதையே கடந்த கால இந்திய வரலாறாக்கி விட்டனர். பொது மனிதர்களின் பார்வையில் வரலாறை எழுத முயற்சிக்கவே இல்லை. வரலாறுகளை பார்ப்பனர்கள் எழுதிக் கொண்டார்கள்.

⁕ கைபர் போலன் கனவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்த பார்ப்பனர்களின் குறிக்கோள் - நல்ல இன்பமான வாழ்க்கை - நல்ல உடல்நலம் நோக்கியதாக மட்டுமே இருந்தன. ரிக் வேதப் பாடல்கள் இதைத்தான் வலியுறுத்தின.

⁕ ஆரியர்கள் - தங்களின் சிந்தனைத் தரத்துக்கு ஏற்றவாறு கடவுள்களை உருவாக்கிக் கொண்டனர். அறிவாலும், பண்பாலும், சமூகம் வளர்ச்சி பெறும் போது, இத்தகைய கடவுள்கள் தூக்கி எறியப்பட்டு விடுகின்றன. ஆனால் இந்தியர்கள் தங்களது மூட நம்பிக்கை காரணமாக, இந்தக் கடவுள்களை இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

⁕ வேதகாலக் கடவுள்கள் எப்படி கற்பிக்கப்பட்டன? கடவுள்களும் மானுடர்களில் ஒருவராகவே கருதப்பட்டு, நண்பர்களாகவும், உண்டு, குடித்து, உடன் வாழும் நண்பர்களாகவும் கருதி, வேதப் பாடல்களை பாடினார்கள்.

⁕ சக மனிதர்களில் ஒருவனாகக் கருதப்பட்ட கடவுள். பிறகு “விண்ணுலக மாந்தராக” ஏற்றம் தரப்பட்டது. அப்போது, சடங்குகளையும், படையல்களையும், மேல் உலகுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று நம்பியதால், அதைச் செய்வதற்கு “புரோகிதர்” என்ற பிரிவு உருவானது. இந்தப் புரோகிதர்களுக்கு மட்டுமே கடவுளின் ‘சக்தி’ ‘ரகசியம்’ எல்லாம் தெரியும் என்றும், யாகப் பொருள்களையும் மந்திரங்களையும் அவர்களிடம் மேலே கொண்டு செல்லக் கூடிய ஆற்றல் புரோகிதர்களுக்கு மட்டுமே உண்டு என்ற கருத்து பரவியது.

⁕ இந்தக் கருத்தை நம்பிக்கையாக மாற்றுவதற்கு புரோகிதர்கள் மாயாஜாலக் கதைகளை உருவாக்கினார்கள்.

⁕ இயற்கையின் விதிகளையும் - அதற்கான விஞ்ஞான ரீதியான காரணங்களையும் அறிந்திடாத மனிதன், கடவுளை மகிழ்வித்து, அதன் மூலம் - இயற்கை விதிகளைத் தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ள முடியும் என்று நம்பினான். இந்த நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு இடைத்தரகர்களாக மாறிய புரோகிதப் பார்ப்பனர்கள் - சகல அதிகாரம் படைத்தவர்களாக மாறினர். சக மனிதனாகக் கருதப்பட்டு, முதலில் ரிக் வேதத்தின் மூலம் கூறப்பட்ட பல கடவுள்கள், இப்போது புரோகிதர்களுக்கும் பயன்படாததால், அந்தக் கடவுள்களை புரோகிதர்கள் கைகழுவினார்கள். தியோசன்,

மித்திரன், சாவித்திரி, பூசன், ஆதித்தியன், மாருத்தியன், அதிதி, திதி, ஊர்வசி போன்ற கடவுள்களை பார்ப்பனர்களே ஒதுக்கி விட்டார்கள். (இது வேத காலப் பார்ப்பனர்களின் கடவுள் மறுப்பு). மகாதேவன் என்ற நிலைக்கு, 'ருத்திரன்' என்ற கடவுள் உயர்த்தப்பட்டு 'சிவன்' என்று பெயர் பெற்றான். இந்த 'சிவன்' யாக சாலையில் கறுப்பு உடையில் தோன்றி, யாகத்தில் படைக்கப்படும் பொருள்கள் எல்லாம் தனக்கே சொந்தம் என்று கேட்டதாக, புரோகிதர்கள் கதைகளைப் பரப்பினர். ருத்தரனுக்கு அடுத்த முக்கிய கடவுளாக விஷ்ணுவை உருவாக்கினார்கள். அனைத்து முக்கிய யாகங்களிலும், சிவனே நேரடியாக வந்து கலந்து கொள்கிறான் என்று புரோகிதர்கள் கதை கட்டினார்கள்.
⁕ மக்கள் யாகங்களை நம்பி, உற்பத்திப் பொருள்களில் தங்கள் உயிர் வாழ்வதற்குப் போக, எஞ்சிய பெரும் பகுதியை யாகத்துக்கே அளித்தார்கள். பார்ப்பனர்கள் - பெரும் கொள்ளை அடித்து, பண்பாட்டுக் காவலர்களாக தங்களை மாற்றிக் கொண்டனர்.

⁕ வேத காலத்தில் - பார்ப்பனர்கள் மதிக்கப்படுகிறவர்களாக மாறினர். பிறகு இந்த மதிப்பைப் பயன்படுத்தி, மக்களை அச்சுறுத்தி, புரோகிதர்களாக மாறினார்கள், அடுத்த கட்டமாக ஆதிக்கவாதிகளாக மாறினார்கள். பிறகு - இந்த ஆதிக்கத்தைத் தொடர்ந்து காலம் காலமாகத் தக்க வைத்துக் கொள்வதற்கான திட்டங்களைத் தீட்டத் துவங்கினர். இதற்காகவே தங்கள் முழு நேரத்தையும் பார்ப்பனர்கள் செலவிட்டனர்.

⁕ தனது தேவைக்கு ஏற்ப இயற்கையைக் கட்டுப்படுத்த விரும்பி, அதற்காகக் கடவுளைத் திருப்தி செய்த மனிதன், சிந்தனை வளர்ந்து, இயற்கையின் மாற்றத்துக்கான காரண காரியங்களைப் புரிந்து கொண்ட பிறகு உலகின் ஏனைய பகுதிகளில், இத்தகைய சடங்குகள் அறிவியலுக்கு ஏற்ப மாற்றம் பெற்று விட்டது. ஆனால், இந்தியாவில் மட்டும், இந்த மாற்றம் ஏற்படவே இல்லை. காரணம், இந்த மந்திரங்களையும், சடங்குகளையும், தங்களிடமே தக்க வைத்துக் கொண்டுவிட்ட பார்ப்பனர்கள் - இவைகளை தங்களுக்கான மந்திரங்களாகக் காப்பாற்றி, மக்கள் முன்னேற்றத்தைத் தடை செய்து, சமூகத்தில் தேக்க நிலையை ஏற்படுத்தி விட்டனர்.

⁕ இதற்காக - யாகங்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கான நூல்களை எழுதி, அதைத் தங்களுக்குள் ரகசியமாக வைத்துக் கொண்டனர். இதற்குப் பெயர் "பிராமணங்கள்" யாகங்களைப் புரியாத புதிராக்கி - யாருடைய நலனுக்காக, எந்த நோக்கத்துக்காக யாகங்கள் நடத்தப்படுகின்றன என்பதற்கு எந்த விளக்கமும் தராமல், "பிராமணங்களை" உருவாக்கிக் கொண்டனர். இதன் மூலம் பிராமணங்களைப் படித்தவர்கள் கூட - யாகங்களை செய்ய முடியாது; பார்ப்பனப் புரோகிதர்களால் மட்டுமே அதைச் செய்ய முடியும். ஆதிக்கவாதிகளாக மாறிய பார்ப்பனர்கள், இதன் மூலம் - மூன்றாவது கட்டமாக - தங்களைக் கடவுளுக்குச் சமமாக அடுத்தக் கட்டத்துக்கு உயர்த்திக் கொண்டுவிட்டனர்.

⁕ இதன் மூலம் - பார்ப்பனப் புரோகிதர்கள் கடவுளின் ஒரு பிரிவு; மற்ற கடவுளர்கள் ஒரு பிரிவு என்ற நிலை வந்தது. யாகங்கள் - இந்த இரண்டு பிரிவினருக்கும் பங்கிடப்பட்டன. சுலோகங்களும், சடங்குகளும் கடவுளுக்கும் யாகப் பொருள்கள் மற்றொரு கடவுளான பார்ப்பனர்களுக்கும் என்று பங்கீடுகளை உருவாக்கினார்கள்.

⁕ படிப்படியாக - பார்ப்பனர்கள் தங்களை உயர்த்திக் கொண்டே போனதற்கு, சமூகத்தில் எதிர்ப்புகளும் வரத் துவங்கின. இந்த எதிர்ப்புகளை சமாளிக்க - பார்ப்பனர்கள், அடுத்த கட்டத்துக்கு தங்களை உயர்த்திக் கொண்டார்கள். கடவுளுக்கும் மேலாக, படைப்பில் முதன்மையானவர்களாகத் தங்களை அறிவித்துக் கொண்டனர். இதற்காக 'பிராமணங்களில்' சில இடைச் செருகல்களைச் செய்து கொண்டனர். அப்படி இடைச் செருகலாக வந்தவைகளில் ஒன்று தான் 'சதபதபிராமணம்'. "ரிஷிகளின் மரபுகளில் வந்த புரோகிதப் பார்ப்பான் - கடவுளுக்கு எல்லாம் கடவுள்; அனைத்துக் கடவுள்களும் அவனுக்குள் அடக்கம்" என்று 'சதபத பிரமாணம்' கூறுகிறது.

⁕ பார்ப்பனப் புரோகிதக் கும்பலின் இந்த மூர்க்கமான கொடுங்கோல் ஆதிக்கம், மத்திய காலத்துக்கு முந்தைய இந்திய வரலாறு முழுதும் நிலவியது. மன்னர்களே பார்ப்பனர்களைக் கட்டுப்படுத்த முடியாது. மன்னர்கள் பதவி ஏற்கும் போது புரோகிதன் கூறுவான்: "மக்களே, நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இந்த மனிதன் உங்களுக்குத் தான் அரசன். ஆனால் சோமன் தான் பார்ப்பனர்களுக்கு அரசன்".

⁕ வேதங்கள் - மனிதர்களால்தான் பாடப்பட்டன. இதற்கு வேதங்களிலேயே சான்றுகள் உண்டு. ஆனால் பார்ப்பனர்கள் வேதங்கள் கடவுள்களால் பாடப்பட்டவை என்று பச்சையாகப் பொய் கூறினார்கள். எனவே கடவுளே பார்ப்பனர்கள்தான் என்று சாதித்தார்கள்.

⁕ எதிர்ப்புகள் நசுக்கப்பட்டன; அதற்காகவே 'மனுதர்மம்' வந்தது. வேதத்தைக் கேட்க சூத்திரர்களுக்கு தடை போட்டார்கள். "வேதங்கள் விவாதங்களுக்கு அப்பாற்பட்டது" என்று மனுதர்மம் கூறியது. எனவே வேதங்களை இயற்றியது கடவுள் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். வேதத்துக்குப் பணிய மறுத்தால், சமூகத்தை விட்டு விரட்டப்பட்டு விடுவார்கள் என்று 'மனு'வின் சட்டம் மிரட்டியது.

⁕ கி.பி.7 அல்லது 8 ஆம் நூற்றாண்டுகளிலேயே மரப்பட்டைகளிலும், ஓலைகளிலும் எழுதி வைக்கும் எழுத்து வடிவங்கள் வந்துவிட்டன. ஆனால் பார்ப்பனர்கள் - எழுத்து வடிவம் வந்த பிறகும், வேதங்களை எழுத்து வடிவில் பதிவு செய்யவே இல்லை. காரணம் இவைகள் மற்றவர்களிடம் பரவினால், தங்கள் ஆதிக்கம் தகர்ந்துவிடும் என்பதால் தான். இதன் காரணமாகத் தான் மரப்பட்டை, ஓலைகளில் கண்டுபிடிக்கப்பட்ட இந்திய எழுத்து வடிவங்கள் எதிலும், வேதங்கள் கிடைக்கவே இல்லை. இந்தியாவில் இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்து வடிவங்கள் அனைத்துமே பவுத்த மதத்தைச் சார்ந்தவைகளாக மட்டுமே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பவுத்தத்

துறவிகள் இயற்றிய "வசிஷ்ட தர்ம சாஸ்திரம்" தான் முதன் முதலில் எழுத்து வடிவத்தில் பதிப்பிக்கப்பட்டதாகும்.

ஊடுறுவல் எனும் சதி

* பார்ப்பனர்களின் சடங்கு - யாகங்களில் வெறுப்பும், சலிப்புமடைந்த ஒரு கூட்டம் - காடுகளை நோக்கி, 'தபசு' செய்யப் புறப்பட்டது. பார்ப்பனர்களிலே சிலரும் - பெருமளவு சத்தியர்களுமே, இப்படிக் காட்டை நோக்கிக் கிளம்பியவர்கள். தங்களை வருத்திக் கொண்டு, வாழ்க்கையின் துயரங்களுக்கு விடை தேடும் முயற்சிகளில் இவர்கள் இறங்கினார்கள். இவர்கள் யாகங்களை எதிர்த்தனர். அதைவிட 'தியானமே' சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார்கள். இவர்கள் அப்போது எழுதிய நூல் தொகுதிகளுக்குப் பெயர் "ஆரண்யகங்கள்". யாக மந்திரங்களின் மோசடிகளையும், புரோகிதர்களின் நயவஞ்சகத்தையும், இந்த 'ஆரண்யகங்கள்' தோலுரித்தன. இயற்கையின் புதிர்களுக்கான விடைகளை பகுத்தறிவின் அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கினர்.

* முதலில் வந்த 'ஆரண்யகங்கள்' பிராமணங்களின் 'கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டன. பிறகு பிராமணங்களை முற்றாக ஒதுக்கிவிட்டு ஆரண்யகங்களை விரிவுபடுத்தி எழுதினார்கள். அதுதான் 'உபநிஷத்துக்கள்'. புத்த மதம் தொடங்கப்படும் காலம் வரை, இந்த உபரிஷதங்கள் புதிது புதிதாக வந்து கொண்டே இருந்தன. உபரிஷதங்களின் காலம் - புத்த மதம் தொடங்கிய கி.மு. நான்காம் நூற்றாண்டோடு முடிவடைந்து விட்டது. உபநிடதங்களின் காலம் முடிவுக்கு வந்தாலும் கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரை உபநிடதங்கள் எழுதப்பட்டுக் கொண்டே இருந்தன. உபநிடதங்களில் வேதத்துக்கு எதிரான கருத்துகளும் உண்டு. ஆனால் பார்ப்பனர்கள், வேதங்களின் இறுதி வடிவமே உபநிடதங்கள் என்று கூறுகிறார்கள். இதில் அடங்கியுள்ள கருத்துகளுக்கு 'வேதாந்தம்' என்று பெயர்.

200க்கும் மேற்பட்ட உபநிடதங்கள் இருக்கின்றன. ஆனால் வேதத்தோடு இணைத்துப் பார்க்கப்படுவது 108 உபநிடதங்கள் தான். ஆனால், புரோகிதக் கலாச்சாரத்துக்கு, சத்திரியர்களிடமிருந்து (அரசாளும் பிரிவு) எழுந்த முதல் எதிர்ப்பை உபநிடதங்களில் காண முடிகிறது.

* அரசர்களாக இருந்த சத்திரியர்களுக்கும், புரோகிதப் பார்ப்பனர்களுக்கும் சமூகத்தில் யாருக்கு அதிக அதிகாரம் என்பதில், பகைமை முற்றிக் கொண்டே வந்தது. சில சத்திரிய மன்னர்களே, பார்ப்பனர்களின் வேதங்களையும், யாகங்களையும் கற்றுக் கொண்டு, புரோகிதர்களைப் புறக்கணித்தனர். உதாரணமாக ஜனமே ஜெயன் என்ற மன்னன், புரோகிதர்களை அழைக்காமலே யாகம் நடத்தினான்.

⁕ உபநிடதங்களில் மறுபிறப்பு - மறு உலகம் - கடவுள் - ஆன்மாவை மறுக்கும் கருத்துக்கள் அங்குமிங்குமாக காணப்படுகின்றன. 'சுவம் சவேதம்' என்ற ஒரு உபநிடதம் பகுத்தறிவுக் கருத்துக்களைக் கூறுவதோடு மூடநம்பிக்கைகளைச் சாடுகிறது.

⁕ ஆனால், ஒரு திட்டமிட்ட வரலாற்று மோசடி அரங்கேற்றப்பட்டது. பகுத்தறிவைப் பேசிய உபநிடதங்களைப் பார்ப்பனர்கள் முழுமையாகப் புறக்கணித்தார்கள். கருத்து முதல்வாத அடிப்படையில் ஆன்மீகம் பேசிய உபநிடதங்களை மட்டுமே பார்ப்பனர்கள் பிரகடனப்படுத்தினார்கள். இப்போது தொகுக்கப்பட்டுள்ள 'வேதாந்தத்தில்' கருத்து முதல்வாதத்தை முன்னிறுத்தும் - 'ஆன்மீகம்' பேசும் உபநிடதங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இந்திய தத்துவ இயலில் இதுவே அதிகார பூர்வமானது என்று உறுதியாக்கி விட்டார்கள். முதலில் வேதங்கள் - பிறகு பிராமணங்கள்; இதிலிருந்து ஆரண்யங்கள்; இறுதியாக உபநிஷத்துக்கள் என்று வந்து, 'வேதாந்தம்' என்று இறுதி வடிவம் எடுத்தது. சக மனிதனாக வேதங்களில் பாடப்பட்ட கடவுள்களை விண்ணுலகத்தவராக மாற்றி, பார்ப்பனர்கள் முதலில் மதிக்கப்பட்ட மனிதர்கள் என்ற நிலையிலிருந்து, புரோகிதர்களாக மாறி ஆதிக்கவாதிகளானார்கள். அடுத்த கட்டமாக, தங்களையும் கடவுளுக்கு சமமாக்கிக் கொண்டார்கள். இறுதியாகத் தங்களையே கடவுளுக்கும் மேலானவர்களாக்கிக் கொண்டனர்.
இப்படித்தான் புரோகிதர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொண்டனர்.

⁕ வேதங்களில் துவங்கி - வேதாந்தம் வரை பல்வேறு மாறுதல்களுக்குட்பட்ட சிந்தனைப் போக்குகளில் - வேத எதிர்ப்புக் கருத்துக்களும் உள்ளடக்கமாக இருந்தாலும் - வேதச்சார்பு சிந்தனைகளை மட்டுமே பார்ப்பனர்கள் வேதாந்தமாக்கி - மற்றவைகளை ஒதுக்கி விட்டதையும் பார்த்தோம். இதனைத் தொடர்ந்து மேலும் பல சிந்தனைகளும் இருந்தன. பூர்வ மீமாம்சம், உத்திர மீமாம்சம் அல்லது வேதாந்தம், வைசேஷிகம், நியாயம், சாங்கியம், யோகம் - எனும் 6 சிந்தனை மரபுகள் தோன்றின. இவைகளில் வைசேஷிகம், நியாயம், சாங்கியம், யோகம் ஆகிய நான்கு மரபுகளும் பகுத்தறிவை நோக்கியே சிந்தித்தன. ஆனாலும் நாட்கள் செல்ல செல்ல - பழமைப் போக்குடன், இவைகள் சமரசம் செய்து கொண்டன.

⁕ சாங்கியம் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க - பகுத்தறிவுச் சிந்தனையாகும். இந்தச் சிந்தனைக்கு வடிவம் கொடுத்தவர் கபிலர் என்ற பார்ப்பனரல்லாதவர். இவரை 'அசுரர்' என்று குறிப்பிடுகிறார்கள். சாங்கியச் சிந்தனைகளை 'அசுரர்களுக்கு' கற்றுத் தந்ததாக, 'பாகவதம்' குறிப்பிடுகிறது. உலகம் படைக்கப்பட்டது அல்ல; அது பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டது என்ற பகுத்தறிவு அடிப்படையிலான பரிணாமக் கோட்பாடு சிந்தனைக்கு ஏற்ப இதன் கோட்பாடுகள் அமைந்திருந்தன. ஆனாலும், இதிலும் பார்ப்பனியக் கருத்துகளைப் பார்ப்பனர்கள் தந்திரமாக நுழைத்து விட்டார்கள். "சாங்கியம் - கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டது; வேதப் புரட்டுகளுக்கு எதிரானது. பின்னாட்களில் இதில் வேதங்களுக்கு ஆதரவான கருத்துகள் இடைச் செருகல்களாக

சேர்க்கப்பட்டுள்ளன. இவைகளை எல்லாம் வெட்டி எறிந்து விட்டால்கூட, சாங்கிய மூலக் கருத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை; இதிலிருந்தே இவை இடைச் செருகல் என்பதை உறுதி செய்ய முடியும்" என்கிறார், ஆய்வாளர் கார்பே. வைசேஷி யகம், நியாயம், சாங்கியம், யோகம் ஆகிய சிந்தனைகளின் பகுத்தறிவுக் கருத்துக்களை பார்ப்பனர்கள் ஊடுருவி சிதைத்த பிறகு, வேண்டா வெறுப்பாக, இவைகளையும் பார்ப்பனர்கள் அங்கீகரித்தார்கள்.

* கபிலரைப் போலவே - மற்றொரு சிந்தனையாளர் கணாதர். இவர் தோற்றுவித்தது வைசேஷிகம். இவர் கூறிய 'அணு' பற்றிய கொள்கைகள் - தாராள சிந்தனைக்கு தூண்டுதலாக இருந்தது. கபிலர், கணாதர் வழிவந்த சிந்தனையாளர்கள் - எவ்வித சமரசத்துக்கும் இடம் கொடுக்காமல் வேதக் கடவுள்கள், யாகங்கள், மந்திரங்கள், சடங்குகள், உபநிடதங்கள், உட்பட அனைத்தையும் ஒட்டு மொத்தமாக நிராகரித்து, தூக்கி எறிந்தார்கள்.

* கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு சமயத் தொண்டு அமைப்பு உருவானது. இந்த அமைப்பில் இடம் பெற்றவர்களின் பெயர் 'பரிவிராஜகர்' என்பதாகும். இவர்கள் - நாடோடிகள். வீட்டை விட்டு வெளியேறி ஊர் ஊராகச் சென்று மக்களை சந்தித்து, வைதீகப் பார்ப்பனியத்துக்கு எதிரான மத மறுப்புப் பிரச்சாரங்களை செய்தனர். பார்ப்பன புரோகிதர்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வந்தாலும், அது பற்றிக் கவலைப்படவில்லை. அறிவுப் புரட்சி நடப்பதற்கான களம் அமைத்துக் கொடுத்தவர்கள் இவர்கள் தான்.

"இவர்களில் பார்ப்பனர்கள் எவரும் இல்லை. இவர்களின் கருத்துக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. மன்னர்கள், சான்றோர்கள், அரசு அலுவலகர்கள், வணிகர்கள், கைவினைஞர்கள், உழவர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் பரிவிராஜகர்களை வரவேற்று பெருமதிப்பு செய்தனர்" - என்று ரைஸ்டேவிட்ஸ் என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார். இவர்களுக்காக - மக்கள் ஊர் தோறும் மேடைகளை அமைத்துக் கொடுத்தார்கள்.

* வேத - யாகங்களில் நம்பிக்கை இல்லாமல், வீட்டை விட்டு வெளியேறி காடுகளுக்குச் சென்று, 'தவம்' செய்த கால கட்டத்தைத் தொடர்ந்து - காடுகளுக்குச் செல்லாமல், ஊர்தோறும் சென்று மக்களை சந்தித்து சிந்தனைகளைப் பரப்பும் அமைப்பு உருவாகி, அறிவுப் புரட்சிக்கு அடித்தளமிட்டது. பரிவிராஜகர்கள் - துறவிகளின் கூட்டமைப்பு ஒன்றையும் உருவாக்கினார்கள். இதிலிருந்து முகிழ்த்தது தான், பவுத்தம், சமணம்.

* சுய சிந்தனையாளர்களின் வளர்ச்சி, பார்ப்பனர்களுக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்தன. இவர்கள் மீது வெறுப்பைத் தூண்டிவிடும் பிரச்சாரத்தைப் பார்ப்பனர்கள் மேற்கொண்டார்கள். வேதத்தை மறுப்பவர்களை 'நாத்திகர்கள்' என்றும் வேதத்தை நம்புகிறவர்களை 'ஆத்திகர்கள்' என்றும் பார்ப்பனர்கள் பிரச்சாரம் செய்தார்கள். ஆத்திகம்

- நாத்திகம் என்பது பார்ப்பனர்கள் உருவாக்கிய சொற்றொடர்களே! (கடவுளை மறுப்பவர்கள் நாத்திகர்கள் அல்ல; வேதத்தை மறுப்பவர்களே நாத்திகர்கள் என்று இறந்து போன சங்கராச்சாரியும் கூறியிருக்கிறார்.)

* பவுத்த - சமண மதங்களுக்கு அடித்தளமிட்ட மற்றொரு சிந்தனை 'லோகாயதா'. இந்தச் சொல்லுக்கு 'மக்களிடையே பரவி இருப்பது' என்பது பொருள். இது முழுமையான கடவுள் - வேத மறுப்பு சிந்தனைகளைக் கொண்ட அமைப்பு. ரிக்வேத காலத்திலேயே - இது தோற்றம் கொண்டுவிட்டது. ஆனால் லோகாயதவாதிகளின் நூல்கள் முழுவதையும் பார்ப்பனர்கள் - அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அழித்து விட்டார்கள். இவர்களின் முக்கிய இலக்கியமான 'பிரகஸ்பதி சூத்திரம்' (கி.பி.600) முழுதுமாக அழிக்கப்பட்டு விட்டது. பார்ப்பனர்களின் 'இதிகாசங்களிலும்', புத்தரது உரையாடல்களிலும் லோகாயதவாதம் பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன. "இந்தியப் பொருள் முதல்வாத சிந்தனைகளை (பார்ப்பன வேத - எதிர்ப்பு சிந்தனை) அவற்றின் எதிர்ப்பு இலக்கியங்களிலும், திறனாய்வு நூல்களிலும் காணப்படும் மேற்கோள்களிலிருந்து மட்டுமே அறிய முடிகிறது" என்கிறார், முன்னாள் குடியரசுத் தலைவரும் - இந்து மத ஆய்வாளருமான பார்ப்பனர் இராதாகிருஷ்ணன்.

* லோகாயதக் கருத்துக்களை எளிமையாக விளக்கியவர் - சார்வாகர். இதனால் பார்ப்பனர்களின் பழிப்புக்கும், தூற்றுதலுக்கும் உள்ளானார். 'சார்வாகம்' என்ற சொல்லுக்கு 'இனிமையான பேச்சு' என்று பொருள். இப்படி பரிவிராஜகர்களின் நாடு தழுவிய பிரச்சாரமும், சார்வாகரின் லோகாயதமும் - பவுத்த சமண சிந்தனைகளுக்கு அடித்தளமிட்டன.

* உபநிடதங்களில் கூறப்பட்ட சிந்தனைகள்; கணாதர், கபிலர் போன்ற சிந்தனையாளர்களின் புரோகித எதிர்ப்பு கருத்துக்கள்; பரிவிராஜகர்கள் எனும் நாடோடிப் பிரச்சாரகர்களின் வேத மத எதிர்ப்புப் பிரச்சாரம்; எல்லாவற்றுக்கும் மேலாக சார்வாகர்களின் பகுத்தறிவுக் கருத்துகள் - எல்லாம் சேர்ந்து, பார்ப்பனர்கள் சமூக மேலாதிக்கத்தைக் கேள்விக்குறியாக்கின. பார்ப்பனர்களின் ஆதிக்கப்பிடி குலையத் துவங்கியது. சமூகம் ஒரு சிந்தனைப் புரட்சிக்கு தயாராகிக் கொண்டிருந்தது.

* பார்ப்பனர்களுக்கு எதிரான இந்தப் புதிய சிந்தனைகளைப் பிரச்சாரம் செய்தவர்கள் - அரசு அதிகாரத்தில் இருந்த சத்திரியர்கள்கள் தான். உபநிடத காலத்துக்குப் பின்பு, வணிக சமுகத்தின் துணையுடன், சத்திரியர்கள் பார்ப்பன புரோகித ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தார்கள்.

* பார்ப்பன வேத மரபுகளுக்கு எதிரான மெய்யியல் சிந்தனை மரபுகளை நிறுவியவர்கள் அனைவருமே பார்ப்பனரல்லாதார் என்பதில் எவ்வித அய்யமும் இல்லை. சிலர் பிற்படுத்தப்பட்டவர்கள், சிலர் அடிமைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள்; சிலர் "தீண்டத்தகாதவர்கள்" .

⁕ புத்தர் சத்திரிய இனத்தைச் சார்ந்தவர். சாக்கிய குல மன்னர் வம்சத்தைச் சார்ந்தவர். இவரது தந்தை சுத்தோதனன் நேபாளப் பகுதியில் கபிலவஸ்து என்ற நகரை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். அரசரின் துணைவி மாயாதேவி. இருவருக்கும் கி.மு.543 இல் லும்பினி என்ற சிற்றூரில் சித்தாந்த கவுதமன் மகனாகப் பிறந்தார்.

⁕ இளவரசராக வளர்ந்தும் - அரண்மனையை விட்டு வெளியேறிய சித்தார்த்தன் - முனிவர்களிடம் பாடம் கற்பது - ஆழ்ந்த தியானம் செய்வது என்று பல ஆண்டுகளைக் கழித்தார். பரிவிராஜகர் என்ற நாடோடிப் பகுத்தறிவுப் பிரச்சாரகர்களுடன் இணைந்து, பல இடங்களில் சுற்றித் திரிந்து விவாதித்தார். இறுதியில் அவர் உருவாக்கிய புத்த மார்க்கம் - சமூகத்தில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தது.

⁕ பிக்குகளின் சங்கம் ஒன்றை உருவாக்கி அவர்கள் வழியாக நாடு முழுதும் பவுத்தக் கொள்கைகளைப் பரப்பச் செய்தார். பெண்கள் முன்னேற்றத்தை புத்தக் கொள்கை வலியுறுத்தியது. அவர்களும் துறவியாகும் உரிமை வழங்கப்பட்டு, பிக்குளிகளாக நியமிக்கப்பட்டனர். அதுவரை - பார்ப்பன வீடுகளுக்குள் மட்டுமே நடந்து வந்த குருகுலக் கல்விமுறை மாற்றப்பட்டன. கல்விக் கூடங்கள் - பவுத்த கட்டிடங்களுக்கு மாற்றப்பட்டன. புரோகிதர்களின் மொழியான சமஸ்கிருதம் மறைந்து, மக்கள் மொழியான பாலி பிரபலமடைந்தது. வறட்சி மற்றும் பஞ்சத்தைப் போக்குவதற்கு யாகங்களை நடத்தும் முறை கைவிடப்பட்டு, பாசனத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. சமூகத்தை வர்ணாஸ்ரம அடிப்படையில் பிரிந்ததை புத்தர் கடுமையாக எதிர்த்தார். புத்தர் மிகச் சிறந்த ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார். சாதி, ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். தனது எண்பதாவது வயதில் - கி.மு.483 அல் புத்தர் இறந்தார்.

⁕ புத்தர் தனது கொள்கைகளை ஏற்றுக் கொண்ட பார்ப்பனர்களையும் தனது மார்க்கத்துக்குள் சேர்த்துக் கொண்டார். அதைப் பயன்படுத்திக் கொண்டு பார்ப்பனர்கள் புத்த மார்க்கத்தை ஊடுருவி அழித்துவிட்டனர். நாகார்ஜூனன் என்ற பார்ப்பான் ‘மகாயானம்’ என்ற பவுத்தப் பிரிவை உருவாக்கினான். ‘சூன்யவாதம்’ என்ற கோட்பாட்டை, புத்த மார்க்கத்துக்குள் வெகுநுட்பமாக இவன் நுழைந்துவிட்டான். உறுதிப்படுத்த முடியாததை ‘வெறுமை’ என்று சூன்யவாதம் கூறியது. நாகார்ஜூனன் ‘வெறுமை’க்கு புதிய வியாக்யானம் தந்தான். ‘வெறுமை’ என்பது ‘இல்லா ஒன்று’ அல்ல. எல்லாவற்றுக்குமே இதுவே ஆதாரமானது என்றான். இந்த ‘வெறுமை’யை ‘பிரம்மம்’ என்று கூறி - அதை பவுத்தத்துடன் இணைத்து ‘பவுத்த பிரம்மம்மே’ அறுதியான உண்மை என்று வியாக்யானம் செய்தான். புத்தர் என்பவரை மாமனிதராகக் கருதாமல், உலகத்துக்கு அப்பாற்பட்டவர்’ என்று கூறி, புத்தர் உலகில் தோன்றி மறைந்தார் என்றும் - புத்தராக அவர் வலம் வந்தது மாயத் தோற்றம் என்றும் நாகார்ஜூனனின் மகாயானம் கூறி - புத்த மார்க்கத்தின் அடிப்படையையே தகர்த்தது. புத்த மார்க்கம்

நிறுவனப்படுத்தப்பட்ட மதமாகியது. ஏராளமான பார்ப்பனர்கள் மகாயான புத்த மதத்தில் சேர்ந்தனர்.

பவுத்தர்களைப் படுகொலை செய்த பார்ப்பனர்கள்!

* பவுத்தத்தை முற்றிலுமாக ஒழித்து, மீண்டும் வேதத்தை அரியணையில் ஏற்றத் துடித்தார்கள் பார்ப்பனர்கள். இதற்கு - முதலில் கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களின் படைப்பு இலக்கியங்களை எல்லாம் அழித்து ஒழிக்கும் வேலையைத் துவக்கினர். குறிப்பாக நாத்திகத்தை வலியுறுத்திய லோகாயதவாதிகளின் இலக்கியங்களை முழுமையாக மீட்கவே முடியாதவாறு அழித்து ஒழித்து விட்டனர். இந்த லோகாயதர்களின் வேத-கடவுள் மறுப்பு சிந்தனைகளை எதிர்த்தும், இகழ்ந்தும் பார்ப்பனர்கள் எழுதிய நூல்களிலிருந்து தான் துண்டு துண்டாக லோகாயதவாதம் பற்றிய கருத்துகள் காணக் கிடக்கின்றன. இதுபற்றி பிரபல ஆய்வாளர் தேவிபிரசாத் சட்ட பாத்யாயாயா இவ்வாறு கூறுகிறார்:

"பிற சிந்தனை மரபுகளின் படைப்பிலக்கியங்களாவது ஓரளவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால் லோகாயதர்களின் உன்னதப் படைப்பிலக்கியங்களின் மூலப்படிகள் மீட்கவே முடியாதவாறு அழிக்கப்பட்டு விட்டன. துண்டுதுண்டாக வெட்டப்பட்ட சில வரிகள் காணக் கிடைக்கின்றன. அவை கூட லோகாயத எதிர்ப்பாளர்களின் நூல்களில் தான் உயிர் வாழ்கின்றன."

* படைப்பிலக்கியங்களை மட்டுமல்ல; புத்தகக் கலைகளையும் - பண்பாட்டையும் அழித்து ஒழித்தனர்; புத்த மடலாயங்களை எல்லாம் அழித்தார்கள்.

* நயவஞ்சகமாக படுகொலைகளைப் புரிந்து ஆட்சிக்கு வந்த புஷ்யமித்திரன் என்னும் பார்ப்பன அரசன், அசோக மன்னர் நிறுவிய 84,000 கல்வெட்டுத் தூண்களை இடித்தான். இந்தக் கல்வெட்டுத் தூண்களில் அசோகர் பிறப்பித்த சமூக சீர்திருத்த அரசு ஆணைகளும், புத்தரின் சிந்தனைகளும், மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன.

* பவுத்த பிக்குகளும், பிக்குனிகளும், பவுத்தத்தைத் தழுவிய பாமர மக்களும், ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். பவுத்தத்தை வேரும் வேரடி மண்ணோடும் அழிக்கும் வரை, இந்தப் படுகொலைகள் தொடர்ந்தன.

* காஷ்மீரத்தைச் சார்ந்த பிரபல வரலாற்று ஆசிரியர் கல்கணன் கூறுகிறார். "பிறர் பற்றி பழி கூறுவோர் சிலரின் தூண்டுதலால் ஜாலுக்கண் என்ற காஷ்மீர மன்னன், பவுத்த மடாலயங்களிலிருந்து எழுப்பப்படும் சங்கொலி, தனது தூக்கத்தைக் கெடுப்பதாகக் காரணம் கூறி அவற்றை இடித்துத் தள்ளினான்."

* ஆய்வாளர் கல்கணன் மற்றொரு அதிர்ச்சியான தகவலையும் தருகிறார். அபிமன்யு என்ற காஷ்மீரை ஆண்ட பார்ப்பன மன்னன், பவுத்தர்களை இனப்படுகொலை செய்தான் அது இனப்படுகொலை அல்ல என்றும், கடும் பனிப்பொழிவினால், இறக்கிறார்கள் என்றும் பொய்ப் பிரச்சாரம் செய்தான்; இந்தப் படுகொலைகள் நடக்கும் குளிர்காலமான 6 மாதங்களில் - தனது நாட்டை விட்டு அவன் வெளியேறி விடுவான். தன்வ பிஷாரா என்ற பள்ளத்தாக்குப் பகுதியில் தங்கி விடுவான்; பவுத்தர்கள் படுகொலைகள் நாட்டில் திட்டமிட்டபடி நடக்கும். கடும் பனியினால் பவுத்தர்கள் மட்டும் தான் இறப்பார்களா? பார்ப்பனர்கள் ஏன் இறப்பதில்லை? "பார்ப்பனர்கள் இறக்காததற்குக் காரணம் அவர்களிடம் உள்ள ஆன்ம சக்தி; அந்த ஆன்மீக சக்தியைப் பயன்படுத்தி, அவர்கள் கடவுளுக்கு யாகங்களையும், படையல்களையும் செய்ததால், அவர்கள் சாவதில்லை. பவுத்தர்கள் அவ்வாறு செய்யாததால் மரணமடைந்தனர்" என்று விளக்கம் கூறினான், அந்தப் பார்ப்பன மன்னன்.

* பவுத்த மதத்தினர், ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றார்கள் என்று கூறி, ஆத்திரமடைந்து, ஆயிரக்கணக்கான பவுத்த மடாலயங்களைத் தீக்கிரையாக்கினான், காஷ்மீர் மன்னராகிய நரன் என்ற கின்னரன். பவுத்த மதத்தினர் வாழ்ந்த அந்தக் கிராமங்களில் மத்தியமாதா எனும் பகுதியிலிருந்து பார்ப்பனர்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். இவை எல்லாம் ஆய்வாளர் கல்கணன் தரும் தகவல்கள்.

* காஷ்மீர் பகுதியில் மட்டுமல்ல; இந்தியாவின் பிற பகுகளிலும், பவுத்தர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். சிராவஸ்தியை ஆண்ட விக்கிரமாதித்தன் பவுத்தர்களைக் கொடுமைப்படுத்தினான். வங்காள மன்னன் சசாங்கன் பவுத்தர்களைத் தனது பிறவி எதிரிகளாகக் கருதினான். புத்தர் அறிவொளி பெற்றதாகக் கூறப்படும், போதி மரத்தை வெட்டி வேரோடு சாய்ப்பதற்குப் பலமுறை முயன்றான். கேரளாவை ஆண்ட குமாரிலபட்டன் கொடுமை தாங்காமல், பவுத்த மதத்தினர் அனைவரும் கேரளாவை விட்டு வெளியேறினர். சுதன்வனன் எனும் மன்னன், தனது குடிமக்களுக்கு இவ்வாறு ஆணையிட்டான், "தனுஷ்கோடிப் பாலத்திலிருந்து (இலங்கைக்கு ராமர் கட்டியதாகக் கூறப்படுவது) இமாலயம் வரை, பவுத்த மதத்தினரைக் குழந்தைகள், முதியவர்கள் என்று பாராது அனைவரையும் கொன்றுவிட வேண்டும். அவ்வாறு செய்யாதவர்கள் கொல்லப்படுவர்கள்." இத்தகவலை 'சங்கர விஜயம்' என்ற நூல் தெரிவிக்கிறது, புத்த மார்க்கத்தை விரிவாக ஆய்வு செய்த பேராசிரியர் பி. லட்சுமிநரசு, தனது ஆய்வுகளில், இந்தப் படுகொலைகள் பற்றிய தகவல்களைக் கூறியுள்ளார்.

* ஆய்வாளர் டபிள்யூ.டி. வில்கின்ஸ் இவ்வாறு கூறுகிறார்: "பவுத்தருடைய சீடர்களும் பவுத்த மதத்தைச் சார்ந்த பாமர மக்களும் ஈவு இரக்கமின்றிக் கொடுமைப் படுத்தப்பட்டார்கள். வெட்டிக் கொல்வது, நாடு கடத்துவது அல்லது வாள்முனையில் இந்து மதத்துக்கு மாற்றுவது என்று ஏராளமான கொடுமைகள் செய்தார்கள். பிற மதத்தினர் மீது அடக்குமுறையை ஏவி விடுவதும், அட்டூழியங்கள் புரிவதும் உலகம்

முழுதும் நடந்துள்ளது. ஆனால் பவுத்த மதத்தை இந்தியாவை விட்டுத் துரத்துவதற்காக, செய்யப்பட்ட அடக்குமுறைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் ஈடான வேறு ஒன்று உலகின் எந்த மூலையிலும் நடந்தது இல்லை.

தொகுப்பு : இராசேந்திரன்-கீற்று

சென்னை: திராவிடர் பேரியக்கத்தின், தமிழ்நாட்டின் தந்தையாக போற்றப்படுகிறவர் தந்தை பெரியார். அவர் 13 வயது சிறுவனாக ஈரோடு தெருக்களில் அலைந்து திரிந்த போது திராவிட சித்தாந்தம் குறித்த எந்த சிந்தையும் இல்லாத காலத்தில் சுவாமி விவேகானந்தரிடம், தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என நெஞ்சை நிமிர்த்து கர்ஜித்த பெருந்தகையாளர்தான் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை

"தாங்கள் எந்த மக்களிடையில் பிறந்துள்ளார்களோ அவர்களை உயர்த்தும் கடமையை உணர்ந்துள்ளவர்களே மேன்மையடைவார்கள். தமது பொன்னான நாட்களை, தமது சக்தியை, ஆன்மாவையும் உடலையும், தமது பலத்தையும் அடிமைத்தனத்தை எதிர்க்கும் இயக்கத்தை முன்கொண்டு செல்ல அர்ப்பணிப்பதற்கு சபதம் மேற்கொள்பவர்களே மேன்மையடைவார்கள். நல்லது வந்தாலும், கெட்டது வந்தாலும், சூரிய ஒளி வீசினாலும், புயல் வீசினாலும், கௌரவம் வந்தாலும், அவமரியாதை ஏற்பட்டாலும் தீண்டப்படாதவர்கள் தமது மனித மாண்பை பூரணமாகத் திரும்பப் பெறுகின்ற வரையில் போராட்டத்தை நிறுத்துவதில்லை என்று சபதமேற்பவர்களே மேன்மையடைவார்கள்.- **டாக்டர் அம்பேத்கர்**

வர்ணாசிரமம் என்பதன் பொருள், வர்ணம் என்பதற்கு சமுதாய மக்கள் செய்யும் தொழிலையும், ஆசிரமம் என்பதற்கு வாழும் வாழ்வியல் முறையை விளக்குவதே ஆகும். விராட் புருசனின் முகம், கைகள், தொடைகள் மற்றும் கால்களிலிருந்து
முறையே வேதியர், சத்திரியர், வணிகர் மற்றும் சூத்திரர் எனும் நால்வகை வர்ணத்தினர் தோன்றினர். விராட் புருசனின் இடுப்புக்குக் கீழுள்ள முன்புறப் பகுதியிலிருந்து கிரகஸ்த ஆசிரமமும் (இல்லறம்), இருதயத்திலிருந்து பிரம்மச்சரியம் (மாணவப் பருவம்) ஆசிரமமும், மார்பிலிருந்து வனப் பிரஸ்த ஆசிரமமும் (காடுறைந்து வாழும் முறை), தலையிலிருந்து சந்நியாச ஆசிரமமும் (துறவறம்) தோன்றின

ஸ்ரீ பாஷ்யம் என்பது 'ப்ரஹ்ம ஸூத்திர'த்துக்கான உரை அல்லது வியாக்யானம். அந்த ஸூத்திரத்தில் "அப ஶூத்ராதிகரணம்" என்று ஒரு தலைப்பு வருகிறது ((முதல் பாகம் மூன்றாம் பாதம்).ஶூத்திரர்கள் ப்ரஹ்மத்தின் ரகசியத்தை அறிந்து கொள்ளலாமா என்று ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. அவர்களுக்கு அதற்கான அருகதை இல்லை என்பதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அதில் ஒன்று "ஶூத்திரர்கள் பிணம் போன்றவர்கள். அவர்கள் வேதத்தை ஓதினால் அவர்கள் நாக்கை பிளக்க வேண்டும் கேட்டால் காதில் காய்ச்சிய ஈயத்தை ஊற்ற வேண்டும்....... என்று ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருப்பதால் அவர்களுக்கு வேதபூர்வமான ப்ரஹ்மத்தை அறிந்துகொள்ள தகுதி இல்லை" என்று ராமானுஜர் ஸூத்திரத்துக்கு விளக்கம் எழுதுகிறார்.

ஆதி சங்கரரும் அவ்வாறேதான் வியாக்யானம் எழுதியிருக்கிறார்.

ராமானுஜர் சமத்துவம் போதித்துவர் ஜாதிக் கட்டமைப்பை எதிர்த்தவர் என்று புருடா விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.ராமானுஜர்தான் கோபுரத்தின் மீது ஏறி வேதத்தை அனைவரும் கேட்கும் வண்ணம் உபதேசித்ததவர் ஆனால் வேதத்தை அவருக்கு உபதேசித்தவர் இதனை தகுதி இல்லாதவர் காதில் விழும்படி நீ சொன்னால் நீ நரகத்தை அடைவாய் என சொல்லி இருக்கிறார் ஆனால் ராமானுஜர் வேதத்தை காதில் கேட்பவருக்கு வைகுண்ட பிராப்தி எனவே தான் நரகத்திற்கு சென்றாலும் அனைவரும் வைகுண்டம் செல்லட்டும் என்று செயல்பட்டவர்.

ப்ருதாவின் மைந்தனே! என்னிடம் அடைக்கலம் கொள்பவர்கள், அவர்கள் **பாவ யோனியில் பிறந்த இழிய பிறவியைச் சேர்ந்தவராயினும்**

பெண்டிர், வைசியர்கள்(வணிகர்), சூத்திரர்கள்(தொழிலாளர்) - பரமகதியை அடைய முடியும்.

பாவயோனி வழியாகப் பிறந்த இழிபிறவி என்று சொல்வதால், பிறப்பைக் கொண்டே ஒருவரின் தகுதி தீர்மானிக்கப்படுகிறது என்பதை இச்சூத்திரம் தெளிவாக்குகிறது!

பிறப்பே தகுதியைத் தீர்மானிக்கிறது என்று வெளிச்சம் போடுகிறது கீதையின் பதினெட்டாம் அத்தியாயம். ஸ்லோகம்-41!

“எதிரிகளைத் தவிக்கச் செய்பவனே! **பிறப்பினால் ஏற்படும் குணபாவங்களால் நிகழும் அவரவர் செயல்(கருமங்)களின்தன்மைகளுக்கு ஏற்ப, பிராமணர்கள், சத்திரியர்கள்,வைசியர்கள், சூத்திரர்கள் என்று பிரித்து** அறியப்படுகிறார்கள்.”.இந்தச் சுலோகத்தைக் காட்டி, அவரவர் குணபாவங்களாலேயே நால்வருணம் என்று எல்லோரையும் முட்டாளாக்குவார்கள்.

Swami Vivekananda, the 19th-century Hindu monk and Vedantist, stated that the Bhagavad Gita may be old but it was mostly unknown in Indian history till the early 8th century when Adi Shankara (Shankaracharya) made it famous by writing his much-followed commentary on it.[44][45] Some infer, states Vivekananda, that "Shankaracharya was the author of Gita, and that it was he who foisted it into the body of the Mahabharata."[44] This attribution to Adi Shankara is unlikely in part because Shankara himself refers to the earlier commentaries on the Bhagavad Gita, and because other Hindu texts and traditions that compete with the ideas of Shankara refer to much older literature referencing the Bhagavad Gita, though much of this ancient secondary literature has not survived into the modern era.[44]

J. A. B. van Buitenen, an Indologist known for his translations and scholarship on Mahabharata, finds that the Gita is so contextually and philosophically well knit within the Mahabharata that it was not an independent text that "somehow wandered into the epic".[46] The Gita, states van Buitenen, was conceived and developed by the Mahabharata authors to "bring to a climax and solution the dharmic dilemma of a war".[46][note 8] According to Alexus McLeod, a scholar of Philosophy and Asian Studies, it is "impossible to link the Bhagavad Gita to a single author", and it may be the work of many authors.[37][49] This view is shared by the Indologist Arthur Basham, who states that there were three or more authors or compilers of Bhagavad Gita. This is evidenced by the discontinuous intermixing of philosophical verses with theistic or passionately theistic verses, according to Basham.[50][note 9]

How did caste come about?

Manusmriti, widely regarded to be the most important and authoritative book on Hindu law and dating back to at least 1,000 years before Christ was born, "acknowledges and justifies the caste system as the basis of order and regularity of society".

The caste system divides Hindus into four main categories - Brahmins, Kshatriyas, Vaishyas and the Shudras. Many believe that the groups originated from Brahma, the Hindu God of creation.

At the top of the hierarchy were the Brahmins who were mainly teachers and intellectuals and are believed to have come from Brahma's head. Then came the Kshatriyas, or the warriors and rulers, supposedly from

his arms. The third slot went to the Vaishyas, or the traders, who were created from his thighs. At the bottom of the heap were the Shudras, who came from Brahma's feet and did all the menial jobs.
The main castes were further divided into about 3,000 castes and 25,000 sub-castes, each based on their specific occupation.
Outside of this Hindu caste system were the achhoots - the Dalits or the untouchables

.சி. சர்க்கார் கருத்துகள்

இந்தியத் தொல்பொருள் ஆய்வாளர், அறிஞர் முனைவர். சி.சி. சர்க்கார் "குருச்சேத்திரப் போர் உண்மையான வரலாற்று நிகழ்ச்சி அல்ல" என்று கூறுகிறார். அதற்கு அவர் கீழ் கண்ட காரணங்களை முன் வைக்கிறார்.
சிவேத சாகித்தியத்தில் எங்குமே பாரதப் போர் பற்றிக் கூறப்படவில்லை.

1. பவுராணிகர்களுக்குக் கூட மகாபாரதப் போர் எப்போது நடந்தது என்று தெரியவில்லை.
2. பொ.ஊ.மு. 4 ஆம் நூற்றாண்டிற்கு முன்னருள்ள எந்தவோர் இலக்கியத்திலும் மகாபாரதப் போர் பற்றிக் குறிப்பிடப் படவில்லை.
3. மகாபாரதப் போர் நடந்த குருசேத்திரம் ஒர் போர்க்களமாக வேதங்களில் எங்கும் கூறப்படவில்லை.

மொகஞ்சதாரோ அரப்பாவில் வாழ்ந்த மக்கள் இரும்பை அறிந்திருக்கவில்லை. பொ.ஊ.மு. 3000-விலோ பொ.ஊ.மு. 4000-த்திலோ பாரதப்போர் நடந்ததாக எடுத்துக் கொண்டால், அவர்கள் இரும்பாலான அயுதங்களை பயன்படுத்தவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டிவருமென்று டாக்டர் சங்காலியா சுட்டிக் காட்டுகிறார். பொ.ஊ.மு. 6-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இரும்பாலான ஆயுதங்கள் இந்தியாவில் பயன்படுத்தப் படவில்லையென்றும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.குருசேத்திரத்தில் நடந்த அகழ்வாராய்ச்சிகளிலும் இந்த மகாயுத்தத்தோடு சம்மந்தப்பட்ட எந்தவொன்றும் கிடைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது என்று குறிப்பிடுகின்றார்.

யஜூர்வேதம் (6, 22) என்ன சொல்லுகிறது?"ஓ இந்திரனே! உயிர் வாழ்க்கைக்கு இன்றி யமை யாதவைகளான பிராண வாயு, ஜலம், அன்னம், முதலியவைகளை ஆரியர்களாகிய எங்களுக்கு அமிர்தமாகவும், எங்களை யார் பகைக்கிறார்களோ, அந்த அனாரியர்களுக்கு விஷமாகவும் ஆக்கிவிடும்" என்கிறதே யஜூர்.
பிராமணனிடத்தில் வணங்காமையாலும், உபநயநம் முதலிய கர்மலோகத்தினாலும் மேற் சொல்லும் க்ஷத்திரிய ஜாதிகள் இவ்வுலகத்தில் வரவர சூத்திரத் தன்மையை யடைந்தவர்கள்" (மனுதர்மம், அத்தியாயம் 10, சுலோகம் 43)
பௌண்டரம், ஔண்டரம், திராவிடம், காம் போசம், யவநம் சகம், பாரதம், பால்ஹீசம், சீநம், கிராதம், தரதம், கசம் இந்தத் தேசங்களை யாண்டவர்கள் அனைவரும் மேற்சொன்னப்படி சூத்திரர்களாகி விட்டார்கள். (மனுதர்மம், அத்தி யாயம் 10, சுலோகம் 44)
ரிக் வேதம் மனிதன் கடவுளின் உடலில் நான்கு பகுதிகளிலிருந்து தோன்றியதாகவும், தலைப்பகுதியிலிருந்து பிராமணர்களும், கைகளிலிருந்து சத்ரியர்களும், தொடையிலிருத்து வைஷ்யர்களும், இறுதியாக பாதத்திலிருந்து ஷூருதர்களும் தோன்றியதாக கூறுகிறது.
யாரிடமேனும் நல்ல விஷயங்களைக் கற்கலாம்:
பிறரிடமிருந்து பல விஷயங்களை நாம் கற்க வேண்டும். ஆம்: கற்க மறுப்பவன் செத்தவனாகி விட்டான் எனக் கொள்க.

“அததீத பராம் வித்யாம் ப்ரயத்னாதவராதபி
அந்த்யாதபி பரம் தர்மம் ஸ்த்ரீரத்னம் துஷ்குலாதபி “ (மனு 2.238)
"மாணிக்கத்தை நிகர்த்த பெண்மணி தாழ்ந்த ஜாதியில் தோன்றினாலும் அவளை உன் மனைவியாகக் கொள்வாயாக: தாழ்குடிப் பிறந்த ஞானியிடமிருந்தாவது, உயர்ந்த ஞானத்தை, அவரது திருவடிகளில் சேவை செய்து பெறுவாயாக; சண்டாளனிடமிருந்தேனும், முக்திக்கு மார்க்கத்தை அவருக்குத் தொண்டு செய்து பெறுவாயாக” என்று நமது மனு கூறியுள்ளார். பிறரிடமிருந்து நல்லன அனைத்தயும் கற்போம். ஆனால் உங்களது சொந்த இயல்புக்குத் தகுந்தபடி அவற்றைக் கிரகித்துச் சேர்த்துக் கொள்ளுங்கள். அவர்களைப் போல் மாறிவிடாதீர்கள். இந்தப் பாரதீய வாழ்க்கையின் இயல்பு முறையிலிருந்து வெளியே இழுக்கப்படாமலிருங்கள்; பாரதீயர்கள் அனைவரும் வேற்று இனத்தவரைப் போல உண்டு, உடுத்து, நடந்தால், அது பாரத் நாட்டுக்கு நன்மை செய்யுமென்று ஒரு கணமும் நினைக்காதீர்கள்.
மகாவாக்கியங்கள் பின்வருமாறு:

பிரக்ஞானம் பிரம்ம (प्रज्ञानं ब्रह्म) - "பிரக்ஞையே(அறிவுணர்வே) பிரம்மன்" (ரிக் வேதத்தின் ஐதரேய உபநிடதம்)
அயம் ஆத்மா பிரம்ம (अयम् आत्मा ब्रह्म) - "இந்த ஆத்மா பிரம்மன்"(அதர்வண வேதத்தின் மாண்டுக்ய உபநிடதம்)
தத் த்வம் அஸி(तत् त्वं असि) - "அது(பிரம்மம்) நீ" (சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிடதம்)
அஹம் பிரம்மாஸ்மி(अहं ब्रह्मास्मि) - "நான் பிரம்மன்" (யஜுர் வேதத்தின் பிரகதாரண்யக உபநிடதம்)

உபநிடதங்களில் குறிப்பிடப்படும் வேறு சில முக்கியமான வாக்கியங்கள்:

சர்வம் கல்விதம் பிரம்ம(सर्वं खल्विदं ब्रह्म) - அனைத்து அறிவும் பிரம்மன் (சந்தோக்ய உபநிடதம்)
நேஹ நானாஸ்தி கிஞ்சின(नेह नानास्ति किञ्चिन) - வேறெங்கும் எதுவும் இல்லை(சந்தோக்ய உபநிடதம்)
அசோகனின் கொள்ளு பெயரன் பிருகரத்தரனை அவன் படையில் பணியாற்றி வந்த படைத்தலைவன் புஷ்யமித்தர சுங்கன் என்கிற பார்ப்பான் அரசனைக் கொன்றுவிட்டு தானே அரசன் என்று அறிவித்துக் கொண்டான். அவன் தான் கி.மு.185இல் முதன்முதலாக மநுநீதியைச் சட்ட நூலாக நடைமுறைப்படுத்தியவன் என்று டாக்டர் அம்பேத்கர் எழுதியுள்ளார்.

புத்த பிக்குகளின் தலைகளை வெட்டிக் கொண்டு வருபவர்களுக்கு நூறு பொற்காசுகள் அளிக்கப்படும் என்று நாடு முழுவதும் அறிவித்தான். இப்படி வன்முறையின் மூலமாகத்தான் இந்தியாவில் புத்த மதம் வீழ்த்தப்பட்டது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் இந்தியா முழுவதும் சென்று இந்து அரசர்களைக் கண்டு பேசி மீண்டும் சனாதன தருமத்தை நிலைநாட்டச் செய்தார். அவர் நிறுவிய சங்கர மடங்கள் அப்பணியை இன்றும் செய்து வருகின்றன.

நால்வருண தரும முறை என்னவென்றால் பிராமணன் உயர்ந்தவன்; வேதத்தை ஓதலும் ஓதுவித்தலும் அவன் தொழில் என்றும் சத்திரியன் அரசனாக இருப்பதும் நாட்டைக் காப்பதும், பார்ப்பனர்களை காப்பதும் அவன் கடமை என்பதும் வைசியன் செல்வத்தை உற்பத்தி செய்து பார்ப்பனர்களுக்குத் தானமாக அளிக்க வேண்டியது என்றும் நான்காவது வருணத்தைச் சேர்ந்த சூத்திரன் மேலே உள்ள மூன்று வருணத்தாருக்கும் சேவை செய்ய வேண்டும் என்பதற் காகவே படைக்கப்பட்டவன் என்று கூறி அவர்களை கடுமை யாக உழைக்கச் செய்தனர்.

இந்த மநு நீதியை இராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை உள்ளிட்ட ஆரியர்களின் புனித நூல்களின் வழியே பரப்பி வருகின்றனர்.

சனாதன தரும சாத்திரங்களின்படி சூத்திரர்களுக்கும் பெண்களுக்கும் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டது. ஆண்களைவிட பெண்கள் கீழானவர்கள். ஆண்களுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டியவர்கள் என்று சாத்திரங்களின் மூலம் நிலைநாட்டினர்.